14ஆவது வருடத்தில்....

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்

வாசித்துவீட்டீர்களா?

உலகத் தமிழோசை

6வது இதழ்

சிறப்பு விலை

$1.50 மட்டுமே

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife / GTA Realty Inc.

1711 Mccowan Rd. suite #206, Toronto

Direct: 416.315-9397


OFFICE: 416.321-6969

Sales Agents Welcome

நதி 14    MARCH 01, 2004    பாலம் 05

## பெண்கள் தினம்

## Women's Day



**மார்ச் 08, 2004**

**அனைத்துலக பெண்கள் நாள்**

## இது ஒரு தற்செயலா?

### இரு அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு இடையேயான ஒற்றுமைகள்!

1. ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln) காங்கிரஸ் இற்கு தெரிவுசெய்யப்பட்ட ஆண்டு 1846, ஜோன் எஃப் கெனடி (John F. Kennedy) காங்கிரஸ் இற்கு தெரிவு செய்யப்பட்ட ஆண்டு 1946.

2. ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட ஆண்டு 1860. ஜோன் எஃப் கெனடி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஆண்டு 1960.

3. இரு ஜனாதிபதிகளும் குடிசார் உரிமைகளிற்கு (Civil Rights) முதலிடம் கொடுத்தார்கள்.

4. இரு ஜனாதிபதிகளுடைய மனைவியர்களும் வெள்ளைமாளிகையில் வசிக்கும் போது தங்களது குழந்தைகளை இழந்தார்கள்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஏனிந்த ஏக்கங்கள் பெண்ணே...!




கருவறையில் வளரும் போது - கனவுகள்
பலவிதம்.....!
பெண்ணாக பிரசவித்து விட்டால்
ஏக்கங்கள் பலவிதம்....;

வளர்த்தெடுக்க செலவதில் - ஓர்
ஏக்கம்.....!
நீ பருவமடைந்து விட்டால் பாதுகாக்க;
வேண்டுமென்ற வேதனை ஏக்கம்...;

மணமென்று வடம் தனில் விட்டு - வரும்
வரன் நடுவிலே.....!
வரையறையில்லா சீதனமாம் சீர்வரிசை;
என்றிட்ட போது வரும் பெருமேக்கம்.....;

பொல்லாத புவிமீது பெண்ணாகப் பிறந்துவிட்டால் - நீ
ஆடிய தொட்டிலில் இருந்து ;;
இடுகாடு போகும் வரை; சுமையென நினைக்கும் ....!
நெஞ்சங்கள் எத்தனை; எத்தனை.....;
ஏனிந்த ஏக்கங்கள் பெண்ணே....;
கலங்காதே..........
அந்தோ.....பார்.........!!!
காக்கும் கரங்கள் பாரடி பெண்ணே பார்.




எழுதியவர்
எஸ். கலா

Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில்
தங்கத்தின் புதிய வடிவங்கள்!



TEL: 905 848 5151
FAX: 905 848 8502
OPEN 10:30AM - 8:30PM
MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

Singapore Communication

Since 1991

Unbelievable $20 package
with 150 Mins Free and
Evenings & Weekends Free
For More Info come In Store
Hurry This Incredible Offer Ends soon


More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு



மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro.




Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability

- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு



WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

## அருள் விருந்து

- மனத்தகத்து உள்ள மாசு நீங்குமளவு மனிதனுக்குத் துயரம் நீங்குகிறது.
- தீமைகளை நினைக்கின்றபொழுதே நாம் தீமைகளை வளர்க்க ஆரம்பித்து விடுகிறோம். நன்மைகளையே நாம் நினைப்போம்.
- அச்சம் மரணத்துக்கு ஒப்பானது. அஞ்சும் பொழுதெல்லாம் ஒருவன் அழிந்துபட்டுப் போகிறான்.
- தன்னைப்பற்றிய எண்ணம் சிறிதேனும் இல்லாதவன் செயற்கரிய செயலைச் செய்ய வல்லவனாகிறான்.
- ஓர் இனத்தில் அல்லது ஒரு சமயத்தில் பிறப்பது நன்று, ஆனால் அதனுள் கட்டுண்டு கிடந்து சாவது தீது.
- விரும்பிய மாத்திரத்தில் வாலிபனுடைய மனப்பான்மையைப் பெறவல்லவன் ஒருவன் நுண்ணறிவு படைத்தவனாகிறான்.
- கால் நுனிவிரல்களில் ஒருவன் நெடித்து நிற்க முடியாது. தற்பெருமை பூணுபவன் தற்பெருமையில் நெடிது நிற்க முடியாது.
- உயிருடன் இருக்கும்போதே எவன் ஒருவன் புலன்களிடத்து செத்தாரைப் போன்று ஆய்விடுகிறானோ அவனே ஞானிஆவான்.

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262-4176

OFFICE: 416.321-6969

HomeLife / GTA Realty Inc.

1711 Mccowan Rd. suite #206, Toronto



# செய்யும் தொழிலில், வெற்றி பெற

"ரிஸ்க்" (Risk) என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் என்ன வார்த்தை? தமிழில் எந்தச் சொல்லைக் குறிப் பிட்டாலும் அது சரியான பொருளைத் தருமா என்ற "ரிஸ்க்" என் மனத்தில் இருக்கிறது. பொருள் இழப்பைத் தரக் கூடியது என்று பொருள் கொள்ளலாமா? அல்லது "விபரீதம்" என்று பொருள் கொள்ளலாமா? இக் கட்டுரைத் தொடருக்கு பொருள் இழப்பைத் தரக் கூடியதை "விபரீதம்" என்று கொள் கின்றேன். அதாவது இக்கட்டுரைத் தொடரில் "விபரீதம்" என்ற வார்த்தை "ரிஸ்க்" என்ற ஆங்கிலச் சொல்லைக் குறிக்கின்றது. சரி விஷயத்துக்கு வருவோம்.

உங்கள் தொழில் விபரீதமானதா? விபரீதத்தை நீங்கள் சமாளிக்கிறீர்களா? அல்லது விபரீதம் உங்களைச் சமாளிக் கின்றதா? அல்லது விபரீதத்தை எவ்வாறு சமாளிக்க வேண்டும். இக் கேள்வி களுக்கு ஓரளவு விடை காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

விபரீதம் பொருள் இழப்பைத் தரலாம். தராமலும் போகலாம். எதிர்பாரா இலாபத்தையும் நட்டத்தையும் தரக் கூடியது விபரீதம் அல்ல, அதற்கு ஆங்கிலத்தில் Speculation என்று சொல்வார்கள். Speculation க்குத் தமிழ் வார்த்தை என்ன என்று நான் ஆராய்ச்சி செய்யப்போவதில்லை. விபரீதமில்லாத உலகில் எல்லோருமே ஒரேயளவு பொருளைத் தான் சம்பாதிப்பார்கள். இது நடைமுறைக்கு ஒவ்வாத பேச்சு, நடைமுறையில் இல்லாத செயல் என்பது எல்லோருக்குமே தெரியும். விபரீதத்தைத்

தகுந்த முறையில் சந்திக்கத் தயாரா யிருந்து சந்திப்பவர், பல சமயங்களில் தகுந்த வெகுமதியை கூடுதல் வரு வாயைப் பெறுகிறார். விபரீதத்தை தகுந்த முறையில் எதிர்கொள்ளவில்லை யென்றால் அனர்த்தமே விளையக்கூடும்.

உங்கள் தொழில் விபரீதமானதா? ஆம். எல்லாத் தொழிலுமே விபரீதமானது தான்.

உங்கள் போட்டியாளரின் செயல், சந்தையில் தோன்றும் புதிய பொருட்கள், மாறி வரும் நுகர்வோரின் சுவை, வளர்ந்து வரும் தொழில் நவீனம் அல்லது தொழில் நுட்பம் இவை எல்லாமே விபரீதத்தை உங்கள் தொழிலுக்கு உண்டு பண்ணுகிறது. ஆக மற்றவர்களின் செயல்கள் உங்கள் தினசரித் தொழிலை பாதிக்கின்றது. உங்களையும் பாதிக் கின்றது. இல்லையா? இத்தகைய பாதிப்புகள் சில சமயங்களில் திவால் ஆகும் நிலைமையைக் கூட கொண்டு வரலாம்.

உங்கள் தொழிலை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள்; தனி நபராகவா? சில நண்பர்களுடன் சேர்ந்து பார்ட்ணர் ஷிப் முறையிலா? அல்லது பங்குதாரர் ஆக ஒரு கார்ப்பரேஷன் (cooperation) அல்லது கம்பெனி (Company) என்ற முறையிலா எப்படி நடத்தினாலும், முக்கிய நபரின் உடல் நலக்குறைவு உங்கள் வியாபாரத்தையும், உங்கள் குடும்பத்தையும் எவ்வாறு பாதிக்கும் என்று யோசித்தது உண்டா? பெரிய நிறுவனங்கள் விபரீதத்தை அளவிடவும், சமாளிக்கவும் என்று முழுநேர மேலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடும். சிறிய அளவில் தொழில் செய்பவர்களால், பகுதிநேரத்துக்கு கூட விபரீதத்தை அளவிடவோ, சமாளிக்கவோ வேலைக்கு அமர்த்த இயலாது. இதனால் நடைமுறையில் என்ன நடக்கிறது என்றால், விபரீதம், பெருமளவில் அனர்த்தத்தை விளைவிக்கும் வரையில்



பலரும் அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை.

இக்கட்டுரையின் வாயிலாக நாம் பலரும் சந்திக்கும் சில விபரீதங்களையும், அவற்றைச் சமாளிக்கும் வழிமுறை களையும் பார்ப்போம்.

* முக்கிய நபருக்கு பலத்த உடல் நலக்குறைவோ, மரணமோ ஏற்படும் பட்சத்தில் தொழில் என்ன ஆகும்?

* அத்தகைய தருணங்களில், சம்மந்தப் பட்டவரின் வாரிசுகளைச் சம்மந்தப்படுத் தாமல், தொழிலைத் தொடர்ந்து நடத்தமுடியுமா?

* மரணத்துக்கு முன்னால் வரியைக் குறைக்கக்கூடிய உபாயங்கள் ஏதேனும் உள்ளனவா?

தொழில் செய்யும் முக்கிய நபரின் மரணத்தின் போது.

* மரண சாசனம் (Will) தேவையா?

* மரண சாசனம் இல்லையென்றால் என்ன ஆகும்?

* மரணத்திற்குப் பின், தொழிலின் நிலைமை தீர்மானிக்கப்படும் இடைக் காலத்தில், அவரின் குடும்ப நிலைமை என்ன?

* இந்த இடைக்காலத்தில் வியாபாரத்தின் மதிப்பு குறையுமா? (ஆம், குறையும்)

* பங்கு தாரர்களுக்குள் இக் கேள்விகளுக்கு எல்லாம் பதிலாக ஒரு ஒப்பந்தம் இல்லையென்றால் நிலைமை என்ன?

இந்த எல்லாக் கேள்விகளுக்கும் விடை திட்டமிடுக; திட்டமிடுக; திட்டமிடுக; என்பதே.

இழப்பு வருமுன்பே அதைப் பற்றி நன்கு சிந்தித்து, பகுத்தாய்ந்து, அவ்வாறு வரும் பட்சத்தில் அதை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை யும் எழுத்து வடிவில் தெளிவாகக் கொண்டிருப்பதையே "திட்டமிடுக" என்று இங்கு குறிப்பிடுகின்றோம்.

விபரீதத்தைத் தவிர்க்க முடியாது, ஆனால் திட்டமிடலின் வாயிலாகக் குறைத்துக் கொள்ள முடியும். எதிர் காலத்தில் நிகழக்கூடிய வாய்ப்புள்ள ஒரு இழப்பையே "விபரீதம்' என்கின்றோம். திட்டமிடல் அத்தகைய இழப்பைக் குறைக்கக் கூடிய ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும்.

விபரீதத்தைக் குறைக்கக்கூடிய ஒரு அங்கீகரிக்கப்பட்ட முறையானது, அந்த விபரீதத்தை மற்றவர்களுக்கு மாற்றுவதே. ஒரு சிறு கட்டணத்தை விலையாகக் கொடுத்து, உங்கள் விபரீதங்களில் பலவற்றை நீங்கள் காப்புறுதி நிறுவனங் களுக்கு மாற்ற முடியும். உங்கள் வீடு, கார் ஏன் உங்கள் உயிரைக்கூட காப்புறுதி செய்வதன் மூலம், இவற்றில் எழும் விபரீதத்தை நீங்கள் காப்புறுதி நிறுவனங்களுக்கு மாற்றமுடியும். ஒரு பெருந்த இழப்பு நிகழ்ந்தால், அதிலிருந்து உங்களைப் பொருளாதார ரீதியில் காத்துக் கொள்ள ஒரு சிறிய பிரீமியத் (Premium) தொகையை நீங்கள் விலை யாகக் கொடுக்கிறீர்கள்.

சில விபரீதங்களிலிருந்து காத்துக் கொள்ளக் கூடிய சில குறிப்பிட்ட உத்திகளை அடுத்த இதழில் பார்ப்போம். இதற்கிடையில் உங்களுக்குத் தோன்றும் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் விடை காண இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.


உங்களின் ஒரு தொலைபேசி அழைப்பும் எங்களின் தனித்த ஆராய்ச்சியும் உங்களுக்குக் குறைந்த முதலீட்டில் ( Premium) தரமான காப்புறுதி நிறுவனங்களில் இருந்து Life/Critical & Disability Insurances நல்லதோர் பாதுகாப்பைப் பெற்றுத்தரும். $150 டொலர் மதிப்புள்ள உங்கள் நிதித்திட்டமிடல் பற்றிய ஆலோசனையை இலவசமாகப் பெற அழையுங்கள்.

பெரி. முத்துராமன்: 416-430-0623, 416-278-2026



உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.


பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businessline மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.



# கடன் தொல்லையா?

Call : RAJ for consultation
Tel: 416-835-6695



கடன்காரர்களின் தொந்தரவா? சம்பளக் கழிப்பீடு, வழக்குகள் மற்றும் கலெக்சன் ஏஜென்சீஸிடம் இருந்து விடுதலைக்கான அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

அழையுங்கள்: ராஜ்
Tel: 416-835-6695






16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 149



கடந்த கு. எ. போட்டியில் இலக்கம் 14 தவற விடப்பட்டதால் மீண்டும் அதே போட்டி இம்முறையும் பிரசுரிக்கப்படுகிறது.

இட-வல
1. எதிர்ப்புக்குத் தளராமலிரு
2. வண்டியில் காளை மாட்டின் கழுத்திலை பூட்டப்படும் மரம் (வல-இட)
3. மழை (வல-இட)
4. மேடு
5. உடம்பை வளை
6. இளைப்பாறுதல்
8. கடற்பிராணியில் கிடைப்பது (வல-இட)
9. ஒரு 10. குளிர்ச்சி
12. எண்ணையாட்டும் இயத்திரம்

மேல்-கீழ்
1. ஓலை நரம்பு
2. அனுபவி
3. வனம் (கீழ்-மேல்)
6. விரும்பு கீழ்-மேல்)
7. சுவாலை9. சம்மதம்
11. ஒவ்ஒன்றாக (கீழ்-மேல்)
13. ஓமத்தீ வளர்க்கும் குழி (கீழ்-மேல்)
14. இசைக் கருவி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | ட | லோ | ர | க் | கா | ற் | று |
| றி | | | | | ர் | | வா |
| வே | ண் | டு | கோ | ள் | | | வ் |
| ப் | | மா | ல் | | வி | ட | அ |
| பி | | | | து | த் | க | |
| லை | ட | ண் | த | | த | | தை |
| | | | வி | | க | | த் |
| அ | டி | சி | ல் | | ன் | ய | வி |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MARCH 29, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

148இல் வெற்றி பெற்றோர்
1) V. Kangatharan, Donmills
2) P. Rajeswaran, Mississauga


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!
(416) 267-0408 731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

**SPECIAL**



# "கவி" CD இசைதட்டு வெளியீட்டு விழா

கடந்த சனிக்கிழமை (பெப்ரவரி 21, 2004) ஸ்காபரோ சிவிக் சென்ரரில் கவி CD இசைத்தட்டு வெளியீட்டு விழா நடை பெற்றது. கனடாவின் அனேகமான தமிழ் ஊடகங்களும், கலைஞர்களும், பல வர்த்தக பிரமுகர்களும் அன்றைய விழாவுக்கு சிறப்பு சேர்த்திருந்தது இசைத்தளபதி எஸ். ராவினுக்கு கிடைத்த வெற்றியாகும்.

கவி இசைத்தட்டை மொன்றியலில் வெளியிட திட்டமிட்டிருக்கிறது. இசைத்தளபதியின் சொந்த நிறுவனமான ஆர். எஸ். இசைக்கிரியேஷன்ஸ். இனி உலகம் பூராகவும் உள்ள அனைத்து ஆடியோ கடைகளிலும் கவி இசைத்தட்டை மக்கள் பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.rsesai.com இல் on-line மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு திரு. லோரன்ஸ் 416-799-1111

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

வெகு...விரைவில்

S.K தீசனின் முழுநீள நகைச்சுவை சித்திரம் **கலகலப்பு**

DVD யில் வெளிவருகிறது.

# Rogers Cable

## "எம்மவர்க்கு ஒரு நற்செய்தி"

Roges Cable இனால் தமிழர்களிற்கு என Area Representative ஆக நியமித்துள்ளார்கள். 'I DO MY BEST SEE BELOW'

- புதிய இல்லம் செல்கின்றீர்களா?

Cable, TV Service No Connection Fee. Basic cable Two months 1/2 Price $11 மட்டுமே. Save upto $120

- உங்கள் வீட்டில் ஸிஒமபழதார வைத்திருக்கின்றீர்களா?

சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

Rogers Hi Speed Internet Service

1 st month free. 3 Months 1/2 Price $24.95 only

முக்கிய கவனத்திற்கு! NO CONTRACT FOR ANYONE


* Tamil Vision பார்க்க ஆர்வமா?

அழைத்த அதே நாளில் உங்கள் இல்லம் வந்து இலவச இணைப்பை ஏற்படுத்தி தருகிறோம். தமிழில் தொடர்புகளுக்கு எந்நேரமும் அழையுங்கள்

Sanjay - 416-315-2917

**HomeLife GTA Realty Inc., Real Estate Broker**
1711 McCowan Rd.,Suite 206,
Scarborough, ON. M1S 3Y3.
Bus: (416) 321-6969 Fax: (416) 321-6963

**SHIVA SHARMAH**



வீடு வாங்க, விற்க



(416) 666 5515

சிவ சர்மா











BRAND NEW 2 STORY
DETACHD
4 BEDROOMS
3 WASHROOMS
WALKOUT BASEMENT

2 STORY DEATCHED
4 +2 BEDROOMS
3 WASHROOMS
NEW KITCHEN




SPACIOUS 2 BEDROOMS CONDO
2 BEDROOMS
2 WASHROOMS

**NEW CONDOS AVAILABLE IN SCARBOROUGH**


Niru BRAND®
நிரு பிராண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
Free Spoon Inside
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
UK. Marketing Office: NIRU ( Europe) LTD.
Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312




## பட்டணமும் பாலுறவும்



இன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவிலும் கனடாவிலும் எதிர்காலம் என்ன வகையில் இருக்குமோ என்று பெரும் கேள்விக்குறியாக மக்கள் கவலையுடன் வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் பெரும் பரபரப்புடன் பேசுவதும், எழுவதுமாக இருக்கின்றனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இனி வாழ்க்கையே சூனியமாகி விடப்போகின்றது என்று எண்ணி ஏங்கி சிலர் கண்ணீர் சிந்திக் கவலைப் படுகின்றனர். அமெரிக்காவில் இன்று பொருளாதார ரீதியிலும், உயிர் அழிவு என்ற முறையிலும் ஆட்டிப்படைத்து வரும் ஈராக் போர் பற்றியும், நடைபெற இருக்கும் தேர்தலினால் நல்ல எதிர்காலம் எமக்குக் கிடைக்குமா என்று கவலைப்படுகின்றனரா? நம்பிக்கை வைத்த லிபரல் கட்சியும், போல் மாட்டினும் ஊழலில் மூழ்கி எழ முடியாத வகையில் இருக்கின்றனரே, கனடாவை ஆளுவதற்கு நல்ல எதிர்கட்சியும் இப்போதைய நிலைமையில் இல்லை. தேர்தல் வந்தால் நல்ல ஆட்சி வருமோ? கனடாவின் எதிர்காலம் சிறக்குமா என்ற கவலை தான் என்று எண்ணுகிறீர்களா?

அதுதான் இல்லை. கடந்த ஏழு வருட காலமாக தம்மை எல்லாம் தொலைக் காட்சிகளின் முன்பு கட்டி வைத்து மகிழ்வித்து வந்த sex and the city என்ற தொலைக்காட்சித் தொடர் ஒரு முடிவுக்கு வருகின்றதென்றும், இனி அந்தத் தொடர் இல்லாமல் வாழ்க்கை சூனியமாகிவிடப் போகின்றதென்ற கவலையும் தான் அமெரிக்காவிலும், கனடாவிலும் மக்களை பெருமளவில் பாதித்து கண்ணீர் சிந்த வைத்து இருக்கின்றது. வட அமெரிக்காவில் வருடத்திற்கு வருடம் நடைபெறும் திருமணங்களில் கிட்டத்தட்ட 60 வீதமான திருமணங்கள் மணமுறிவு ஏற்படுகின்றன என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதற்கான காரணங்களில் ஒன்று தான் sex and the city போன்ற தொலைக்காட்சித் தொடர்கள். மனித இனத்தின் எதிர்காலத்தை விருத்தி செய்யும் பாலுறவை சந்தையாக்கி அதில் வேண்டியதை யாரும் எப்போதுமே வாங்கி விடலாம் தவறில்லை என்பது போன்ற வாழ்க்கை முறை கலாசார-மாக்கப்பட்டது தான் மனித இனத்திற்கு கிடைத்த சாபம் ஆகும்.

விடலைப்பருவத்தில் பாலுறவு பற்றிய கற்பனை உலகில் வாழுவதும், பகல் கனவு காண்பதுவும் மனித இனத்தில் பொதுவான ஒன்றாகும். மனித இனத்தின் மகிழ்வான வாழ்க்கைக்கு பாலுறவு என்ன வகையில் வழிவகுக்கின்றது என்ற உண்மை தெரியவரும் போது, வாழ்க்கையில் நல்ல ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டியது முக்கியம் என்ற உண்மையும் தெரிய வருகின்றது. பாலுறவில் ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் மண வாழ்க்கைக்கு தகுதி அற்றவர்களாகி விடுகின்றனர். தம்பதிகளிடையே நம்பிக்கையீனத்தையும் மனமுறிவையும் அது கொடுத்து விடுகின்றது. அதனால் அது திருமண முறிவுக்கு கொண்டு செல்லுகின்றது. அதற்காக தம்பதிகளாக வாழ்ப்பவர்கள் எல்லோருமே ஒழுக்க சீலர்கள் என்று அர்த்தமல்ல. அது ஒவ்வொருவரது மன நிலையை பொறுத்தது. உயிர்காக்கும் மருத்துவ பொருட்களை போதைப் பொருட்களாக பாவித்து எவ்வாறு வாழ்க்கையை சீரழிக்கின்றார்களோ அதுபோல், உயிர் ஊட்டும் பாலுறவை சிற்றின்பமாக எவரும் அநுபவிக்கலாம் என்ற வகையில் அமெரிக்க கலாசாரம் அனுமதிப்பதே அவர்களின் வாழ்க்கை சீரழிவிற்கு காரணமாகி இருக்கின்றது.


தாய்மை முதலாக அன்பு, பாசம், பொறுமை என்பனவற்றால் மனித இனம் சீராக வாழ ஆண்களுக்கு உறுதுணையாக நல்ல மனைவியாகவும் தாயாகவும் சகோதரிகளாகவும் உழைத்து வந்த பெண்ணினம் விடுதலை என்றும் பொருளாதாரம் என்றும் வீட்டை விட்டு வெளியில் வரத்தொடங்கியதும் குடும்ப வாழ்க்கை பாழடைய ஆரம்பித்தது. அவர்களில் சிலர் சீரழிந்த வாழ்க்கையை வாழவும் தலைப்படுவது கவலைக் குரியது.

திருமணத்தில் ஆர்வம் இல்லாமல் பாலுறவை பல வகைகளில் அநுபவித்து வாழ்வதே சிறந்த வாழ்க்கை என்ற வகையில் வாழும் தொழில் புரியும் நான்கு பெண்களின் கதையை கொண்டது தான் sex and the city தொடரின் மூலக்கதை. இன்று வட அமெரிக்கப் பெண்களின் கற்பனை உலக வாழ்க்கைக்கு (Fantasy Life) தீனி போட்டு வந்த அந்தத் தொலைக்காட்சித் தொடர் முடிவுக்கு வருவது பற்றி எண்ணிக் கவலைப்படுபவர்களின் ஆதங்கம் புரிகின்றது. அதேவேளை ஒழுக்கத்தை பற்றிய எண்ணத்தை மனித மனங்களில் இருந்து நீக்கி எப்படியும் வாழலாம் என்று எண்ணுபவர்களுக்கு அவர்களின் எண்ணம் போல வாழ்வதற்கு தைரியத்தையும் கொடுத்து வந்த அந்தத் தொலைக்காட்சித் தொடர் முடிவுக்கு வந்ததே என்று யாராவது ஆறுதல் அடைவார்களா? என்று எண்ணினால் பெருமளவில் ஏமாற்றம் தான் பதிலாக இருக்கும்.

சிந்தனை தொடரும்

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்

## மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா



*மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா வருகின்ற June மாதம் Toronto மாநகரில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்கு குறுந்திரைப்படங்கள் உலகெங்கும் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.*

* *பிரதிகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி மே மாதம் 16ஆம் நாள்.*
* *படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.*
* *தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.*
* *பிரதிகள் அனுப்பவேண்டிய முகவரி: 4 Castlemore Avenue*
  *Markham, Ontario, L6C 2B3 Canada*
* *தொடர்ப்புகளுக்கு 416-431-5095, 905-887-7457, email: raathan@ pathcom.com*
* *சிறந்த நெறியாள்கை, சிறந்த திரைப்படம், சிறந்த எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த திரைக்கதை ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.*

*Art Film Society of Toronto*

## நாடகம்

*தீவிர நாடக இரசிகர்களுக்காக ஒரு நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. பிரபல நாடக நெறியாளரான ஞானம் லம்பேட்டின் நெறியாள்கையில் ஆறுமுகத்தின் பிரதியிலான* **"கருஞ்சுழி"** *மேடையேற்றப்படவுள்ளது. சுமார் 2 மணித்தியாலங்கள் நீளமான இந்நாடகம் Yorkwood நூலக அரங்கில் ஏப்ரல் 10 ஆம் நாள் இடம் பெறுகிறது. அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய நாடகம் இது.*


LARGE INDOOR PUBLIC
CAR AUCTION

EVERY WEDNESDAY EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL

> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM
FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

*1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.*

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com





வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)





சொர்க்கத்தில் நிச்சயக்கப்படும் திருமணங்கள்!!!

# விளையாட்டுத் தகவல்கள் - 140

ரெனிஸ்

திருமணத்தில் இணையவுள்ள லேடன் ஹுவிட், கிளைஸ்ட்ரஸ்



பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஆன்ட் வெர்ப் டையமண்ட் போட்டியில், இத்தாலி வீராங்கனை சில்வியாவுக்கு எதிரான ஆட்டத்தில் கிளைஸ்ட்ரஸ் (வலது) ரொட்டடாமில் (Rotterdam) - (நெதர் லாந்து) நடைபெற்ற உலக உள்ளரங்க டென்னிஸ் போட்டியில் ஃபெரேரோவை வென்ற மகிழ்ச்சியில் லேடன் ஹுவிட்.

பெப்ரவரி 24ஆம் திகதி நெதர்லாந்தில் உள்ள ரொட்டடாமில் நடைபெற்றி உலக உள்ளரங்க டென்னிஸ் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் லேடன் ஹுவிட் பட்டம் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஹுவிட் 6-7, 7-5, 6-4 என்ற செட்களில் ஜுவன் கார்லஸ் ஃபெரேரோவைத் தோற்கடித்தார். அவருக்கு ஒரு இலட்சம் டொலர் பரிசு கிடைத்தது.

திங்கள்கிழமை ஹுவிட்டுக்கு 23 ஆவது பிறந்த நாளுக்கான பரிசாக இவ்வெற்றி அமைந்துள்ளது. கிளைஸ்டர்ஸ் வெற்றி: அதே சமயம் அவரது வருங்கால மனைவியும் பெல்ஜியம் வீராங்கனையுமான கிம்கிளைஸ் டர்ஸ் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஆன்ட்வெர்ப் டையமண்ட் போட்டியில் பட்டம் வென்றார்.

உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையாகத் திகழும் கிளைஸ்டர்ஸ், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 6-3, 6-0 என்ற கணக்கில் இத்தாலி வீராங்கனை சில்வியா ஃபரீனாவைத் தோற்கடித்தார். கிளைஸ்டர் ஸுக்கு இது 21 ஆவது உலக மகளிர் ஒற்றையர் பட்டம். அதிகாரப்பூர்வமாக ஹுவிட், கிளைஸ்டர்ஸ் விரைவில் திருமணம் செய்து கொள்ள உள்ளனர்.

## கிரிகெட்

சர்வதேச விளையாட்டு வீரர் விருது - ராகுல் திராவிட்

சர்வதேச விளையாட்டு வீரராக இந்தியாவின் ராகுல் திராவிட் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் முன்னாள் வீரர் வாசிம் அக்ரம், இந்திய நட்சத்திர ரெனிஸ் வீரர் லியாண்டர் பயஸ் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி இவ் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் திராவிட்.

லண்டனில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற பிரம்மாண்டமான விழாவில், ராகுல் திராவிட் சார்பில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் காப்டன் மைக் காட்டிங் விருதைப் பெற்றார்.

நிகழ்ச்சியில் அவர் கூறும்போது, கிரிக்கெட் உலகில் பெயரும் புகழும் பெற்றுத் திகழும் வீரர்களில் ஒருவராகத் திகழும் திராவிட், இவ்விருதுக்கான தகுதியானவரே எனக் குறிப்பிட்டுள்ளார்.

அணியின் 'அரண்' என பெரும்பாலும் அழைக்கப்படும் திராவிட் 2003ஆம் ஆண்டில் குறிப்பிடும்படியான பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

அடிலெய்டில் சமீபத்தில் நடைபெற்ற 2வது டெஸ்டில் இவர் குவித்த 242 ஓட்டங்கள் அவுஸ்திரேலியாவைத் தோற்கடிக்க முக்கிய காரணமானது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் முன்னாள் ஆல்ரவுண்டர் (Allrounder) ஆசிஃப் இக்பால் வாழ்நாள் சாதனை யாளர் விருதைப் பெற்றார்.

ஒன்பது வயது கிரிக் கெட் வீரர் சாஹில் அக்ர்வாலுக்கு சிறந்த இளம் வீரர் விருதும், 11 வயது டென்னிஸ் விளையாட்டாளர் ஹும்சா மஹ்மூத்துக்கு ஆண்டின் சிறந்த ஜூனியர் விருதும் வழங்கப்பட்டது.

கிரிக்கெட் - பரபரப்பான ஆட்டம்

அவுஸ்திரேலியா VS ஸ்ரீலங்கா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் தம்புள்ளையில் நடைபெற்ற பரபரப்பான 2 ஆவது போட்டியில் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் ஸ்ரீலங்கா வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையேயான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரின் 2 ஆவது போட்டி நடைபெற்றது. முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரு அணிகளும் நேற்று மீண்டும் களம் இறங்கின. இதில் முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் 245 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அடுத்து விளையாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்டங்களை எடுத்தது.

இதனால் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது. நடைபெற்ற 2 ஆவது போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் வேகப்பந்து வீச்சாளரான சமிந்தா வாஸ் ஆவார். கடைசி ஓவரில் 8 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் அவுஸ்திரேலியா இருந்தது. ஆனால் அவுஸ்திரேலிய அணி கடைசி ஓவரில் 6 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. வாஸ் அபாரமாக பந்து வீசி அவுஸ்திரேலிய அணியின் வெற்றியை தடுத்தார்.

டாசில் வென்ற இலங்கை அணியின் கேப்டன் அத்தப்பத்து முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார். முதலில் துடுப்பெடுத்தாட எடுத்த முடிவு சரி என்று நிரூபிக்கும் வகையில் ஓபனர்களாக களம் இறங்கிய அத்தப்பத்து, ஜெயசூர்யா இருவரும் விளையாடினர்.

இருவரும் முதல் விக்கெட்டிற்கு 135 பந்துகளில் 121 ஓட்டங்களை குவித்தனர். ஆனால், அவுஸ்திரேலிய அணியின் ஆல் ரவுண்டரான கிளார்க் 5 விக்கெட்டுகளை வீழ்த்த இலங்கை அணி 245 ஓட்டங்களுக்கு முழு விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல் விக்கெட்டிற்கு அத்தப்பத்து, ஜெயசூர்யா இருவரும் 121 ஓட்டங்களை சேர்த்த நிலையில் அத்தப்பத்து (47), முதல் விக்கெட்டாக ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஆட்டமிழக்கும் முன்பு தனது இன்னிங்சில் அபாரமாக விளையாடிய அத்தப்பத்து தனது 46 வது அரைசதத்தை எட்ட 3 ஓட்டங்கள் இருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் விளையாடிய ஜெயசூர்யா தனது முதல் பவுண்டரியை அடிக்க 35 பந்துகளை எடுத்துக்கொண்டார். அதன்பின்பு அதிரடியாக விளையாடி 65 பந்துகளில் 55 ஓட்டங்களை எடுத்தார். இதில் 11 பவுண்டரிகள் அடங்கும். இது ஜெயசூர்யாவின் 55 வது அரைசதமாகும்.

23 வது ஓவரில் ஜெயசூர்யா ஆட்டமிழந்தார். அதன் பின்பு சங்கக் காரா, ஜெயவர்த்தனே இருவரும் இலங்கை அணியின் இன்னிங்சை நிதானப்படுத்தும்

**எஸ். கணேஷ்**

முயற்சியில் இறங்கி 3வது விக்கெட்டிற்கு 70 ஓட்டங்களைச் சேர்த்தனர். ஜெயவர்த்தனே 38 ஓட்டங் களிலும், சங்கக்காரா 39 ஓட்டங்களில் 43வது ஓவரிலும் ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் பெரும் சரிவை இலங்கை சந்தித்தது. சங்கக்காரா ஆட்டமிழந்த போது இலங்கை அணியின் புள்ளிவிபரம் 216/4 ஆகும். இதன் பிறகு 29 ஓட்டங்களில் 6 விக்கெட்டுகளை இலங்கை அணி இழந்தது. தில்ஷன் (11), கலுவிதரனா (0), சந்தனா (4), வாஸ் (5), தர்மசேனா (2), அர்னால்டு (10) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.
49.5 வது ஓவரில் 245 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இலங்கை இழந்தது. கிளார்க் அபாரமாக பந்து வீசி 35 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

246 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் அவுஸ்திரேலியா களம் இறங்கியது. அதிரடி ஓபனரான கில்கிறிஸ்ட்டுக்கு பதிலாக கிளார்க் ஓபனராக களம் இறங்கினார். முதல் ஓவரின் 3வது பந்திலேயே கிளார்க் டக் - அவுட்டாகி வெளியேறினார். ஆனால், ஹெய்டன் பாண்டிங் இருவரும் அபார அரைசதம் அடித்து ஸ்கோரை உயர்த்தினர். முதல் ஓவரிலேயே இணைந்த இந்த ஜோடி 32 வது ஓவர் வரை இணைந்து விளையாடினர்.


ஸ்கோர் 148 ஓட்டங்களா இருந்தபோது பாண்டிங் ஆட்டமிழந்தார். பாண்டிங் 93 பந்துகளில் 69 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து வந்த மார்டின் 5 ஓட்டங்களிலும், சிறப்பாக விளையாடிய ஹெய்டன் 93 ஓட்டங்களிலும், ஆட்டமிழந்தனர். ஹெய்டன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து வெளியேற 41.2 வது ஓவரில் 192/5 என்ற நிலை அவுஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டது. இந்த நிலையில் சைமண்ட்ஸ், பெவன் இருவரும் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடி அவுஸ்திரேலிய அணியை வெற்றியை நோக்கி நகரச் செய்தது.

இந்த நிலையில் சைமண்ட்ஸ் பெவன் இருவரும் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடி அவுஸ்திரேலிய அணியை வெற்றியை நோக்கி நகரச் செய்தது. இந்த நிலையில் கடைசி ஓவரில் 8 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலை அவுஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டது. இந்த ஓவரை இலங்கை வீரர் வாஸ் வீசினார். முதல் இரண்டு பந்துகளில் தலா ஒரு ஓட்டத்தை கொடுத்த வாஸ், அடுத்த 2 பந்துகளில் ஓட்டம் ஏதும் கொடுக்காமல் அபாரமாக வீசினார். 5 வது பந்தில் ஒரு ஓட்டத்தை அவுஸ்திரேலிய அணி எடுக்க கடைசி பந்தில் 5 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. கடைசி பந்தில் 3 ஓட்டங்களை மட்டுமே அவுஸ்திரேலிய அணி எடுத்தது. 50 ஓவரின் முடிவில் 5 விக்கெட்டு இழப்பிற்கு 244 ஓட்டங்கள் அவுஸ்திரேலியா எடுத்தது. இதனால் பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது. இலங்கை அணியில் வாஸ் அபாரமாக பந்து வீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

NTE AUTO

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH



# நாமும் நமது இல்லமும் 183

**0% முதலீடு**

வீட்டின் விலைமாற்றத்திற்கு பல காரணிகளை கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். இந்தக்காரணிகளில் ஒன்றாக வட்டிவீதத்தையும் கொள்ளலாம்.


**வட்டி வீதத்தின்**

கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதமே, மோட்கேஜ் வட்டிவீதத்தில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தும். இப்பொழுதுள்ள வட்டிவீதம் கடந்த 40 வருடங்களில் குறைவானதாகக் கொள்ளப்படுகின்றது. வட்டி வீதத்தை, இவ்வளவு குறைவாக வைத்திருப்பதற்கு காரணம், என்னவாக இருக்கலாம். குறிப்பாக அல்லது மேலெழுந்த வாரியாக கூறப்போனால், பொருளாதாரத்தின் வளர்ச்சி போதாதென்றே கொள்ளலாம். ஓரளவிற்கு இதனை


**ராஜா மகேந்திரன்**

உண்மையாகக் கொள்ளலாம். பொருளாதாரம், நல்ல நிலையில் வளர்ச்சியடையும் போது மக்களால் போதியளவு பணத்தைச் செலவு செய்யக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும். இதனால் பொருட்களிற்கு மக்களின் விருப்பு (Demand) அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இதன் பொருட்டு பொருளாதார வீக்கம் (Inflation) ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே வட்டிவீதத்தை அதிகரித்து பொருளாதார வீக்கத்தை கட்டுப் படுத்தவேண்டிய சந்தர்ப்பம் தேவைப்படலாம்.

ஆனால், அந்த நிலைமை இல்லாமலே பொருளாதார வீக்கம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இன்றைய பொருளாதார நிலைமையை அவதானிக்கும்போது உடனடியாக வட்டி வீதம் அதிகரிக்கும் போலத் தெரியவில்லை. இந்தக்காலத்தில் வீடுவாங்க, மோட்கேஜ் எடுப்பவர்களிற்கு 'Variable Rate' நல்லது போலக் காணப்படுகின்றது. இருந்தும் தனிப்பட்டவர்களின் பொருளாதார நிலைமைக்கேற்ப, Variable Mortgage Rate எடுப்பதோ அல்லது 3 அல்லது 5 வருடத்திற்குரிய அடைத்த மோட்கேஜ் (Closed Mortgage) எடுப்பதோ நல்லது என தகுந்தவர்களுடன் கலந்தாலோசித்து முடிவு எடுப்பது சிறந்தது.





இவ்வருடத்தில் இரண்டாவது தடவையாக கனடிய மத்தியவங்கியின் (Canadian Central Bank) ஆளுநர் DAVID DODGE



மார்ச் 2, 2004 அன்று மத்திய வங்கியின் வட்டிவீதத்தை வெளியிட இருக்கின்றார். அனேகமான பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி, மேலதிக 1/4 % இறக்கம் ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

அப்படி நிலைமை ஏற்பட்டால் முதன்மை வட்டிவீதமும் 1/4 %ஆல் குறைவு ஏற்பட்டு 4.0% ஆகவரக்கூடிய சந்தர்ப்பமே அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் 5 வருட வட்டிவீதத்திலும் இறக்கம் ஏற்படலாம். இது வீட்டுச் சந்தைக்கு உற்சாகமானதாகக் காணப்படலாம். இந்நிலைமை, அதாவது குறைந்த வட்டிவீதம் இந்த ஆண்டுவரை குறைவாகவே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




மேலுள்ள படத்தில் எதிர்வு கூறியபோது இந்த வருடத்தின் இறுதிப்பகுதிவரை (அமெரிக்க தேர்தல் முடியும்வரை, (Nov. 2004)) வட்டி வீதத்தில் அதிகளவு ஏற்றம் ஏற்படும் போலத் தெரியவில்லை.

இருந்தும் இந்த வருடத்தில் விற்கப்பட இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விடக்குறைவாகவே காணப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு காரணங்களாக (a) முதல் தடவை வீடுவாங்குபவர்கள் அதிகமானவர்கள் ஏற்கனவே வாங்கி விட்டார்கள்.
(b) வாடகைக்கு குறைந்த செலவில் எடுக்கக் கூடியவசதிகள் இருப்பதையும் காரணமாகக் கொள்ளலாம். பிறக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவதால் போதியளவு தேவை (Demand) இல்லை என்பதையும் கொள்ளலாம்.

**No Money Down ($ 0 - Down)**

March 01, 04 இலிருந்து வீடு வாங்குபவர்கள் எதுவிதமுதலீடும் இல்லாமல் வீடு வாங்கலாம் என்பதனை CMHC (Canada Mortgage and Housing Corporation) அறிவித்துள்ளது. இதனால் போதியளவு வருமானம் இருந்தும், முதலீடு செய்யப் பணம் இல்லாவர்களிற்கு இது ஒரு அரியவாய்ப்பாக அமைந்துள்ளது. CMHC இன் அறிக்கையின்படி முதல்தடவை வீடுவாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முற்பாடாக குறைந்தது 5% முதலீடு செய்யவேண்டும் என்ற நிலைமை இருந்தது. இப்பொழுது அந்த கட்டுப்பாடும் நீக்கப்பட்டுள்ளது. வீடு வாங்கும் போது காப்புறுதி செய்து கொடுக்கும் இரு நிறுவனங்களிற்குமிடையேயான போட்டியே இந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்கு காரணமாக இருந்தது எண்ணத் தோன்றுகின்றது.

இப்பொழுது 25% குறைவான முதலீட்டுடன் வீடு வாங்குபவர்கள் மோட்கேஜிற்கு எதிராக காப்புறுதி செய்து கொள்ளப்படுகின்றது. இதற்காக GE அல்லது CMHC என்ற நிறுவனங்களே இந்தக் காப்புறுதியை செய்து கொடுக்கின்றது. இதில் CMHC அரசினுடையது. இந்த நிறுவனமே 5% கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது. வீடு வாங்கும் அனைவரும் 25%இற்கு குறைவாக முதலீடு செய்யும்போது காப்புறுதி செய்து கொள்ளவேண்டும். அத்துடன் இதற்கான PST உம் செலுத்த வேண்டும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலீடு இல்லாமல் வீடு வாங்கமுடியும். ஆனால் கட்டுப்பணத்தில் அதிகரிப்பு ஏற்படும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த 0% முதலிட்டால் வாடகைக்கு இருப்பவர்கள் வீடு வாங்க சந்தர்ப்பம் அதிகரிக்கும் எனத் தோன்றுகிறது.

வீடு வாங்குபவர்கள் (Buyer), வீட்டுப் பிரதிநிதி (Realtor)களிற்கிடையிலான தொடர்புகள் வீடு வாங்கியதுடன் முற்றுப் பெறுவதல்ல. உண்மையில் கூறப்போனால், வீடு வாங்கிய பிற்பாடுதான் வீட்டுப் பிரதிநிதியின் அறிவுரைகள் தொடங்கும். வீடு வாங்க விரும்பும் ஒருவரிற்கு வீடு விற்பது என்பது கஸ்டமான விடயமல்ல. வீடு வாங்க விரும்புவரின் சகல தேவைகளையும், பண நிலைமையையும் சரியாகப் புரிந்து, ஆராய்ந்து அதற்கேற்ப வீடு வாங்கிக் கொடுப்பதே ஒரு வீட்டுப் பிரதிநிதியின் கடமை என எண்ணுகின்றேன். தகுந்த வீடு வாங்கினால், பின்னால் தொடரப் போகும் சகலதும் சரியானதாகவே அமையும் என்பது எனது எண்ணம். எனவே வீடு வாங்குபவர்கள் தமது தேவைகளை அறிந்து, தமது வருமானத்திற்கேற்ப வீட்டை வாங்கி வாழ்வில் சிறப்புற வேண்டும்.

தகுந்தவர்களை தெரிவுசெய்வதன் மூலம் இலக்கை இலகுவாக அடையலாம்.

-ராஜா மகேந்திரன்




Raja M. Mahendran, P. Eng.
Broker / Owner
Office - 416- 321-6969
Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5 YrsMortgage | 4.75% |
| Prime rate | 4.25% |
| Bank rate | 2.75% |

APTAC Arts Academy

* Finch & Tapscott
* Denison & Featherstone

பரதநாட்டியம் வாய்ப்பாட்டு
வயலின் மிருதங்கம்
கீபோர்ட் (Key Board)

இரண்டு இடங்களிலும் சிறந்த ஆசிரிய கலைஞர்களினால் நடத்தப்படவுள்ள வகுப்புகளுக்கு, தைப்பூசத்தினத்தன்று மாலை 5 மணிமுதல் 8 மணிவரை, 5637 Finch Ave. East, Unit 1 ( Tapscott & Finch) இல் அமைந்துள்ள தலைமையகத்தில் பாடங்கள் தொடக்கப்படவுள்ளன.

தொடர்பு: திரு. மாசிலாமணி நல்லரட்ணம்
416-268-8561 / 647-439-3175



# ‘நோய் நீக்கி’

## வீட்டு வைத்தியம் (Self Heal)

### உடம்பு துர்நாற்றம் - (Bad Body Odor).

*இது அதிகமாக மச்சம் மாமிசம் உண் பவர்களில் வியர்வை உடம்பில் காய்ந்து ஏற்படும் நாற்றம். இதை தினம் தவறாது நீராடுவதால் தவிர்க்கலாம், அதிக வியர்வை உள்ளவர்கள் வாசனை எண்ணைகளைப் பாவிக்கலாம். நல்ல உடற்பயிற்சி இதை நீக்கும். அதிக கொழுப்பு உணவுகளைத் தவிர்த்தாலும் இதுகுறையும். துத்தநாகம் அதிகமுள்ள பூசணிக்காய், விதைகள், பழவகைகள், உணவில் சேர்ப்பதால் இதை நீக்கலாம். வாசனை எண்ணைகளை குளிக்கும்நீரில் கலந்து நீராடுவதால் துர்நாற்றத்தை நீக்கலாம்.*


*டாக்டர். சி.வ. பரராஜசிங்கம்,* PH.D
*வவுனியா, இலங்கை*


### விசப்பருக்கள் (Boils)

*தேகத்தில் பல பாகங்களில் வரும் சிறிய தடிப்புகள் இவற்றை விசப்பருக்கள், கட்கள் எனப்படும். இவை ஆரம்பத்தில் சிவப்பாகவும், சீழ்ப்பிடிக்கவும் கூடும். இவை அதிக வெப்பத்தாலும் சருமத்தில் கிருமிசேர்க்கையாலும் ஏற்படும். சிறிய பருக்கள் சின்னமுத்து (Measles) என்னும் தொற்று நோய்க்கும் தோன்றும். இது ஆரம்பத்தில் சுரத்துடன் தோன்றிப்பின் பருக்கள் தோன்றும். இது ஒரு வைரஸ் (Virus) கிருமித் தாக்கத்தால் ஏற்படும் தொற்று நோய். இது ஒரு கிழமையில் குணமாகி விடும். அதிக கழிவு வெளியாக்கும் உணவுகளாகிய மச்சம், மாமிசம் தவிர்த்துக்கொள்வது இது விரைவில் குணமாக உதவும், இப்படி கழிவு கூடிய உணவுகளை உண்டால் கழிவுப்பொருட்கள் வெளியாகும் பொழுது சருமத்தில் உள்ள வியர்வை குழாய்கள் அரிக்கப்பட்டு நோய் நீடித்து ஆபத்து ஏற்படும்.*

*அதிக சூட்டினாலும் சருமப்பருக்கள் தோன்றும். இவை கிருமிசேர்க்கை அதிக கழிவு சேர்க்கையால் சீழ்பிடிக்கவும் செய்யும். இவற்றிற்கு சருமத்தை தகுந்த கிருமி நீக்கிகளால் சுத்தம் செய்தல், அதிக கொழுப்பு சேராத உணவு, பழவகைகள் உணவில் சேர்த்தல் விரைவில் இவை குணமாக உதவும். வாசனைமுறைப்படி தேயிலை எண்ணை வென்நீரில் சேர்த்து பூசுவதால் குணமாகும். குளிர்மையான உணவு. ரசங்கள் அதிகம் பருக வேண்டும். உடம்பில் அதிகம் சூடு காரணத்தாலேயே இந்த நோய் ஏற்படுகிறது. எனவே உடம்பை குளிர்மையாக வைத்திருந்தால் ஓரளவு இதைத்தவிர்க்கலாம்.*

### *பாலூட்டு கோளாறுகள் (Breast Feeding Problems)*

*அவையாவன பாலில்லாமை, தனம் வீங்குதல், முலை வெடித்தல், மார்பகக்கூச்சம் ஆகியனவாம். பால் சுரப்பதற்கு அடிக்கொருதரம் பிள்ளையை பாலூட்ட வேண்டும். அப்போதுதான் பால்சுரப்பிகள் பால் சுரக்க ஆரம்பிக்கும். பால் குறைவானவர்ள் சுறாமீன், நெத்தலி மீன் முதலியவற்றை உணவில் சேர்த்தால் நன்கு பால் சுரக்கும். பழவகைகள், தானியவகை, முந்திரி வற்றல், சோயா உணவு அதிகம் பால் சுரக்க உதவும்.*

*பால் சுரந்தபின் அதிகநேரம் பிள்ளைக்கு பாலூட்டாவிடில் பால் சுரந்து அது கட்டி ஆகி தனம் வலிக்கும். இதை வென்நீர் ஒத்தடம் கொடுப்பதால் நீக்கலாம்.*

*பால் நீக்கி (Breast Reliever) என்னும் கருவியைப்பாவித்தும் சுரந்த பாலை வெளியே எடுக்கலாம். தனத்தை மேலிருந்து கீழாக உருவி பாலைவருவிக்கலாம். இப்படிச்செய்து வீக்கத்தை நீக்கியபின் பிள்ளைக்கு தாமதியாது பாலூட்டி பால் கட்டுப்பட்டு வேதனை செய்வதை தடுக்க முடியும். மல்லிகைப்பூவை நீரில் ஊறப் போட்டு முலைக்காம்பை தடவுவதால் வீக்கமும் நீங்கும். பாலும் சுரக்கும்.*

*முலைக்காம்பு வெடிப்பதற்கு காரணம் அதன் காய்வனவுதான். எனவே பால் கொடுத்தபின் சிறுதுளிபால் முலைக்காம்பில் விட்டுவிடுதல் நன்று. மென்மையான தொற்று நீக்கி சேர்வைகள் வெடிப்பில் பூசலாம். ஹோமியோமுறைப்படி ஷகலென்டுலா (Calendula) வென்நீரில் கலந்து தடவலாம். சித்தமருத்துவப்படி சந்தனம், மஞ்சள் சேர்த்துப்பூசி பின் கழுவி விடலாம். வெற்றிலையில் நல்லெண்ணை தடவி வீக்கத்திற்கு போடலாம். மனத்தால் கலவரப்பட்டாலும் பால் சுரப்பு குறையும் எனவே மனதை சாந்தமாக வைத்திருத்தல் அவசியம்.*

*மார்பகக்கட்டிகள் (Breast Lumps) இக்கட்டிகள் அனேகமாக பால் சுரப்பிகளில் பால் உறைந்து கட்டிபட்டு அதன்மேல் சவ்வும் தசைநாரும் இறுகி ஏற்படும் கட்டிகள், சில சமயங்களில் அவை புற்றுநோய்களாகவும் மாறலாம். எனவே இக்கட்டிகள் விரைவில் கரையச்செய்தல் அவசியம். இக்கட்டிகளை தினம் மென்மையாக அழுத்துவதால் கரைந்துவிடும். உணவு வகையில் கொழுப்புக்குறைந்ததாகவும், அதிக நார்ச்சத்தும் ஜீவசத்து தாதுப்பொருட்கள் உள்ளனவாகவும் இருத்தல் அவசியம். விற்றமின் ஏ, ஈ சேர்ந்த கரட், கீரைவகை, செறிவுகுறைந்தபால், சோயா போன்றவை உணவில் சேர்ப்பதால் நற்பலனுண்டு. உடற்பயிற்சி அவசியம். கு.நி முறைப்படி புறங்கை, கால்களின் மேற்பாகம் மார்பின் கு.நிலைகள் உள்ளன. இவற்றை தினம் அழுத்துவதால் விரைவில் கட்டிகள் கரையும்.*

### *நெஞ்சில் கோழைகட்டல் (Bronchitis or Bronchiolitis)*

*இது நெஞ்சிற்குள் இருக்கும் சுவாசப்பைக்கு சுவாசம் ஏற்கும் சுவாக்குழாய்களாகிய ஷப்றங்ககஸ் ஷப்றங்கியோல்ஸ் (Bronchus, Bron chi-oles) ஆகியவற்றில் ஏற்படும் வேக் காட்டால் சளி தேங்கி ஏற்படும் மூச்சுத்திணறலாகும். இதனால் இருமலும் மூச்சுத்திணறலும் காணப்படும். சுரம் காணப்படும். இது நுண்ணிய வைரஸ் (Virus), இந்த உறுப்புக்களுக்குள் பிரவேசிப்பதால் ஏற்படும் வேக்காடாகும். இது ஒரு கிழமைமுதல் இருகிழமைகள் வரை நீடிக்கலாம். சிறுபிள்ளைகளுக்கும், வயோதிபருக்கும், இருதய நோய் முதலியவற்றால் பீடித்திருப்பவருக்கும் இது ஒரு ஆபத்தான நோய். இப்படியான பெலயீனமானவருக்கு நோய் நீடிக்கும் பொழுது இந்த உறுப்புக்களை மேலும் சில பக்ரீறியா (Bacteria) நுண் கிருமிகள் தாக்கி நோயை மேலும் விரிவடையச் செய்து உயிர் ஆபத்து விளைவிக்கலாம். எனவே ஆரம்பத்திலேயே இதற்கு மேல்நாட்டு வைத்தியத்தின்படி தகுந்த கிருமி கொல்லிகள் அன்ரிபற்றிக் (Antibiotic) பாவித்து நோய் கட்டுமீறாது தடுக்கப்படும். இருமலை கட்டுப்படுத்த இருமல் கட்டுப்படுத்தும் மருந்துகளையும், சுரத்தை கட்டுப்படுத்த சுரம் கட்டுப் படுத்தும் அஸ்பிறின் (Aspirin) போன்ற மருந்துகளும் சுவாசப்பை குழாய்களை விரிவடையச் செய்யும் சல்புயூரமோல் (Salbutamol) போன்ற மருந்துகளும் பாவிக்கப்படும்.*

*மாற்று வைத்தியமுறைகள் - சித்த மருத்துவ முறை - தேசிக்காய் தோல், தேயிலை இவற்றை அவித்து வேது பிடித்தால் நாசியிலும், நெஞ்சிற்கட்டிய சளியும் இழகும். கடும் சாயம் உள்ள தேநீர் சில சொட்டு எலும்மிச்சம் சாறு சேர்த்து அடிக்கொருதரம் குடித்தால் நாசி நீரும் நெஞ்சுச்சளியும் குறையும்.*




MOHAN HOMEOPATHIC CLINIC

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROB-LEMS INCLUDING:

- STRESS
- ALLERGIES
- SKIN PROBLEM
- SEXUAL PROBLEMS
- RESPIRATORY PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- FOOT PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | |
|---|---|
| Cough | Flu |
| Depression | Anxiety |
| Asthma | Tonsillitis |
| Gout | Arthritis |
| P.M.S | Leucorrhea |
| Migraines | Hair Loss |
| Diabetes | Cystitis |
| Cancer | Prostatitis |
| Obesity Hemorrhoids | |
| Stumatitis | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

ACTION HONDA

“WHERE CAR OWNERSHIP IS MADE EASY”



**புதிய பழைய** HONDA
வாகனங்களை ஈழத்தமிழ் மகன்
சோதீஸ்
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




*Winter Clearance Special*
*All New & Used Cars for Sale.*

416-704-1179

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm

4334 Kingston Rd, Scarborough



# தூறல்

## 21 Grams

ஒரு Chocolate Bar, ஐந்து '10' சதங்கள் ஆகியவற்றின் நிறை 21 கிராம். அது மட்டுமல்ல ஒரு மனிதன் இறக்கும் பொழுது அவனது நிறை 21 கிராம் ஆல் குறைகிறது. இந்த 21 கிராம் பற்றிய ஒரு சிறு ஆய்வாக மலர்ந்துள்ளது ஒரு திரைப்படம். இத்திரைப்படத்தின் பெயரும் "21 கிராம்" ஆகும்.



பழைய குற்றவாளி, திருந்தி மனிதனாக வாழ முற்படுகிறான். ஒரு ஆண் குழந்தை, பெண்குழந்தை, மனைவி, கோயில் என அமைதியாக அவனது வாழ்வு செல்கிறது.

கணித பேராசிரியர் - இருதய நோயால் (Coronary) பாதிக்கப்பட்டுள்ளார். அவரது காதலி - இவள் முன்னாள் Party Girl. கணித பேராசிரியரின் கருவை தனது வயிற்றில் சுமக்க விரும்புகின்றாள். இதற்காக அவள் செயற்கை மூலம் கருத்தரிக்க வைத்திய ஆலோசனைகளை நாடுகிறாள்.

மற்றொரு அமைதியான குடும்பம் இரு பெண்பிள்ளைகள் மனைவி. ஒருநாள் வீதியில் நடந்து செல்லும்போது கணவனையும், பிள்ளைகளையும் முன்னாள் குற்றவாளியின் கார் மோதி விடுகிறது. கணவனும், பிள்ளைகளும் இறந்து விடுகின்றனர். கணவனின் "இதயம்" கணித பேராசிரியரின் இதயத்துக்கு மாற்றப்படுகிறது. அதேசமயம் முன்னாள் குற்றவாளி சரண் அடைகிறார். தான்தான் அவர்களை காரால் மோதி கொன்றதாக கூறுகிறார். போதிய சாட்சியங்கள் இன்மையாலும், ஆதாரங்கள் இல்லாமையாலும் அவர் விடுதலையாகிறார்.

கணித பேராசிரியர் தனக்கு "இருதயம்" தானம் செய்தவரை ஒரு தனிப்பட்ட Detective மூலம் தெரிந்து கொள்கிறார். பிள்ளைகளையும், கணவனையும் இழந்து வாடும் மனைவிக்கு ஆறுதல் கூறுகிறார். அவளது வாழ்க்கைக்கு உதவிட விரும்புகிறார். இதற்காக தனது காதலியையும் தூக்கி எறிகிறார். ஏற்கனவே விபத்தில் பாதிக்கப்பட்ட ஒருவரது இருதயமே இப்பொழுது இவரது இருதயம். அதுவும் பாதிப்படைகிறது. கணிதப் பேராசிரியரோ இவளது குடும்பத்தை அழித்தவனை தேடிச் சென்று கொலை செய்ய முற்படுகிறார். ஆனால் அவரால் சுட முடியவில்லை. காரோட்டி இவர்களைத் தேடி வந்து தன்னைக் கொல்லுமாறு வேண்டுகிறான். இவர்களுக்கிடையில் நடைபெறும் இழுபறியில், கணித பேராசிரியர் கையில் இருக்கும் துப்பாக்கி வெடிக்கிறது. காரோட்டி, தானே சுட்டதாக கூறுகின்றான். கணித பேராசிரியருக்கு தனது இரத்தத்தை தானம் செய்ய முற்படும் பொழுதுதான் அவள் கருவுற்று இருப்பது என்பது தெரிவருகிறது.

இதில் கணித பேராசியிரியராக Sean Penn ம், அவரது காதலியாக Naomi Watts ம், முன்னாள் குற்றவாளியாக Benicio Del Toro ம் நடித்துள்ளனர். இதன் திரைக்கதை ஆசிரியர் Guillermo Arriaga. நெறியாள்கை Alejandro Gonzalez Inarritu . இப்படத்தின் திரைக்கதை ஆசிரியர் படத்தை மிகவும் சிறப்பாக்கியுள்ளார். சமூகவியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் அதேசமயம் யதார்த்தமாகவும் கதையை நகர்த்துகிறார். கணித பேராசிரியர் புதிய இருதயம் கிடைத்தவுடன் மாறும் அவர் இயல்பு, முன்னாள் குற்றவாளியின் மனோநிலை, அவரது மனைவியின் சமூகம், குடும்பம்

## வானரன்

சார்ந்த பார்வை, குடும்பத்தை இழந்த மனைவியின் சமூகம், வாழ்வின் அடித்தளங்களில் மாறும் பார்வைகள் என விமர்சன ரீதியாகப் படம் இயல்பாகவும் அதேசமயம் பார்வையாளர்களை அந்த விமர்சனத்தை உள்வாங்கவும் செய்கிறது. மதம் எங்கே குறுக்கிடுகிறது - இவர்களது வாழ்வில்? மனோநிலைகள் இணைவதற்கு பதிலாக சமூகம் சார்ந்த வாழ்வே அடித்தளமாக இணைகிறது. ஓர் இழப்புக்கான பரிகாரம் என்ன? இன்னுமொரு இழப்பா? போன்ற பல விமர்சனப் பார்வைகளை முன்வைக்கிறது இத்திரைப்படம். குறிப்பாக ஓர் அழுத்தமான வசனம் "Life has to go on with or without God"

ஒளிப்பதிவாளர் Rodrigo Prieto பாராட்டுகுரியவர். ஒவ்வொரு Frame இலும் இவரது திறமை வெளிப்படுகிறது.

மிகவும் அரியதாக வெளிப்படும் இவ்வாறான படங்களை இயக்கியுள்ளார் Gonzalez. முன்னோக்கிப் பாயும் காட்சிகள், பின்னோக்கிச் செல்லும் விளக்கங்கள் என உத்திகளை உபயோகித்துள்ளார். சில சமயங்களில் குழப்பம் ஏற்பட்டாலும் வித்தியாசமாகவுள்ளது.




ஒஸ்கார் விருதுக்கு சிறந்த நடிகைக்கும், சிறந்த துணை நடிகருக்குமான இறுதித் தேர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல விருதுகளை தட்டிச் சென்றுள்ளது.

உண்மைகளுக்கிடையிலான வர்க்க வேறுபாடுகளை மிக அழகாகப் படமாக்கியுள்ளனர். அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படம். தற்சமயம் Toronto வில் உள்ள பல திரையரங்குகளில் காட்சியளிக்கப்படுகிறது.

## Stumble (ஆங்கிலம்)

கர்நாடக மாநிலத்தில் மிகவும் வளர்ந்துள்ள தகவல் தொழில்நுட்பம் பற்றிய ஒரு சிறிய பார்வையே Stumble. வர்த்தக நிறுவனங்களில் ஏற்படும் திடீர் வேலை நிறுத்தம், அதன் பின்னணி என ஆய்வு செய்கிறது. திடீரென ஒரு நாள் ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் வேலை பார்க்கும் மது என்பவருக்கு வேலை நிறுத்தப்படுகிறது. அவளது வேலை நீக்கத்தை எதிர்க்கும் அவளது அதிகாரியின் வேலையும் போய் விடுகிறது. இவர்கள் அனைவரும் இணைந்து தயாரிக்கும் புதிய Software இல் இவர்களது நிறுவனம் குறிவைக்கிறது. இவர்களது அணியில் உள்ள இருவர் தவிர ஏனையோரை வேலை நீக்கம் செய்கிறது. இதற்கிடையில் மந்திரியும் அவர்களது வெளிநாட்டு தரகர்களும் இணைந்து ஒரு கிராமிய வங்கியை இந்நிறுவனத்தில் முதலீடு செய்யச் செய்கிறார்கள். இந்நிறுவனம் வெளிநாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்கிறது. வெளிநாட்டுத் தரகர்கள் மோசடி செய்துவிடுகின்றனர். கிராமிய வங்கி வங்கோரத்து நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறது. இதில் முதலீடு செய்த விவசாயிகள் நடுத்தெருவில். நிறுவனம் கலைந்து விடுகிறது. முன்னாள் அணியினர் புதிய Software ஐ கண்டு பிடிக்கின்றனர்.



படத்தின் முற்பகுதி மிகவும் யதார்த்தமாக செல்கிறது. பிற்பகுதி வெறும் சினிமாத்தனமாக மாறிவிடுகிறது. வேலைநீக்கம், அரச சட்டம், வேலைபார்க்கும் மனைவியின் அவசியம், அரசியல்வாதிகளுக்கும் வெளிநாட்டுத் தரகர்களுக்குமான தொடர்பு எனப் பல விடயங்களைத் தொட்டுச் செல்கிறது. அது மட்டுமல்லாது "சிறந்த தாய்" பரிசு



பெறும் தாய்க்கும் , பிள்ளைக்குமான உறவு என பல விடயங்களை கூறமுற்பட்டு எதிலுமே ஆழமில்லாமல் போய்விடுகிறது.

ஆறுதலான விடயம் சுகாசினியின் நடிப்பு, கூறமுற்பட்டுள்ள விடயங்கள் "Call Centre" எனப்படும் விடயத்தின் கூறுகள் (உதராணம் "Dell" எனப்படும் Computer இன் சொந்தக்காரர்கள் அவர்களுக்கு இக் கணினியால் அல்லது அதன் கூறுகளில் பாதிப்பு ஏற்பட்டால் இவர்கள் "Dell" Computer நிறுவனத் தொலைபேசி இலக்கத்தை அழுத்துவார்கள். மறு முனையில் ஒரு Tom, Randy, Steve, Dave, Linda என குரல்கள் பதில் கூறும். இவர்கள் அனைவரும் இந்தியர்கள். பெங்களூரில் இவர்களது Call Centre அமைந்துள்ளது) புதிய வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அரசுக்குமான தொடர்பு, போன்ற விடயங்கள் எவருமே கூற முற்படாத விடயங்களைத் தொட்டுச் செல்கிறது.

அது மட்டுமல்லாது பெண் ஒருவரிடம் திறமையுள்ளது என அடித்துச் சொல்கிறது இப்படம். ஆனந் நாக், சுகாசினி, பல்லவி போன்றோர் நடித்துள்ள இப்படத்தை K.M. Chaitanya இயக்கியுள்ளார்.

இப்படம் கிடைக்குமிடம் Markham and Ellesmere உள்ள N.N Video.

அடுத்த தூறலில் "தென்றல்'





நகைச்சுவைத் தொடர்....



# ராசம்மா ராச்சியம்




104




போடு புள்ளடி... வீட்டுக்கு நேரே
போடு புள்ளடி வீட்டுக்கு நேரே...
உலகரின்..காதில் ரீங்காரமிட்டது...



படிக்கும் காலத்தில் தேர்தல் காலத்தில்
பாடசாலை முடிந்து போகும்போது இதுதான் மனனம்



இன்று இலங்கையில் தேர்தல்
இந்தியாவில் தேர்தல்
ஈரானில் தேர்தல்
கனடாவில் தேர்தல்




என்ன...மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் நடக்கப்போகின்றன.
போடு புள்ளடி....போடு புள்ளடி

உலகண்ணை...உலகண்ணை... சிவராத்திரி நித்திரைமுழிப்போடு...வந்து T.V பார்த்து




பகலிலேயே தூங்கிய உலகர், லெக்சன் கனவு கண்டது
எல்லோருக்கும் சிரிப்பாக இருந்தது
வானொலி பத்திரிகை றேடியோ..TV எல்லாம்..தேர்தல் செய்திகள்தான்
அந்த பிரமையில், தூங்கிய உலகருக்கு பகலோ..இரவோ
கனவோ..நினைவோ..எனத் தெரியவில்லை..



சிவராத்திரி நித்திரை முழிச்சா..
பகல் நித்திரை கொள்ளக்கூடாது...
நித்திரை கொண்டா....பலன் இல்லையாம் எண்டா
அரைகுறை தூக்கத்தில்..செக்கண்புளோர் செல்லம்மா..



ஆட்டிலறி அன்னம்மா... TV யில் ஆசிய நாட்டில்
பறவைக் காய்ச்சலில் எரிக்கப்படும்
கோழிகளை...பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்தா
நாம் தனித்தனி B.B.Q போடும் கோழிகளை
ஒன்றாகப் போட்டு கொழுத்தும் போது
மனம்...தாங்கிக்கொள்ள..முடியவில்லை.



மணிக்கூடு இல்லாத காலத்தில்
மனிதனை..தட்டி எழுப்பியது சேவல்கோழி
மன்னிக்கவும் மனிதனை கூவி ....எழுப்பியது சேவல்கோழி




1ம் சாமம் (சேவல் கூவுவது)
அலாம் வைக்காமலே...அயலட்டைக் கோழியெல்லாம்
அடுத்தடுத்து கூவி எமை எழுப்பினவையல்லோ
மனிதன் நேரத்திற்கு எழுந்து உலகை நடத்த வேண்டுமென நினைத்து
கோழிகள்
விழித்து சாமம் சாமமாக கூவுகின்றனவே.

2ம் சாமம் கோழி கூவுவது
எவ்வளவோ..விடயங்களை கணித்து
சந்திரமண்டலம், செவ்வாய்க்கிரகம் வரை சென்று மனிதன் சென்றாலும்
கணிக்காமலே கூவும் சேவல்
அதிகாலை அறிந்து கூவும் குயில்
மழை வருவதை அறிந்து ஆடும் மயில்,
பறவைகள், எத்தனை சிறந்தவை, மனிதன்
வாழ எத்தனை விடயத்தை புரிய வைக்கின்றன.



3ம் சாமம் (கோழி கூவுவது)
ஆட்டிலறி அன்னம்மாவின் மனம் ...?
கோழிகள் ஏனைய பறவைகளின்
பறவைககூச்சலில், பறவைகளின் ஒலியில் சுகந்தமான காலையை இரசித்த எமக்கு
பறவைக் காய்ச்சல் என்னும் போது எவ்வளவு கவலையாக இருக்கிறது



உலகண்ணை நேற்று பேப்பர் பாத்த நீங்களே...
வரிப்பணத்தில் குதிரைகள் வாங்கி
கணக்கு வழக்கிலை ஏதோ..தில்லுமுல்லாம்
என்றா...செல்லம்மா
கனடா கவன்மென்ரிலேயே இப்படியெண்டால் ....?



மக்களிடம் வாங்கினார் வரி
உலாவிட வாங்கினார் பரி
என்று சொல்லி...சிரித்தவர் உலகர்

*- கலகலப்பு தீசன்*


## தவக்கால திருப்பலிப்பூசை

தவக்காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழில் சிலுவைப்பாதை நடத்தப்பட்டு திருப்பலிபூசையும் ஒப்புக்கொடுக்கப்படவிருக்கின்றது.

இடம் - ST. BERNARD OF CLAIRVAUX CHURCH
1789, Lawrence Ave, West. (Jane & Lawrence)
(Between Jane and Black Creek)

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு சிலுவைப்பாதையும் அதைத்தொடர்ந்து திருப்பலிப்பூசையும் ஒப்புக்கொடுக்கப்படும்.

February 28th, March 6th, March 13th, March 20th, March 27th, April 3rd
அனைத்து தமிழ் கத்தோலிக்க மக்களும் இத்திருப்பலிப்களில் கலந்து கொண்டு இறைவன் அன்பையும் ஆசியையும் அருளையும் பெற்றுச் செல்லுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.





சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்
'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்
"நீலம் சில்க்"

- *SONALIKA PURE SILK*
- *JARDHOSHI SATIN & CREPE SILK*
- *JAPAN CRYSTAL SILK*
- *JAIPUR CRYSTAL SILK*
- *VASUNTHARA NETWORK CREPE*

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க...



ராஜா மகேந்திரன்

# Raja M. Mahendran, P.Eng

Brker / Owner

Direct:(416) **315-9397**



**HOMELIFE/GTA Realty Inc.,** Real Estate Broker
1711 McCowan Rd.,Suite 206, Scarborough, ON. M1S 3Y3.
TEL: (416) 321-6969 FAX: (416) 321-6963
email: raja@mahendran.ca

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க...

## HOUSE FOR RENT

HWY 7/ LESLIE



$1475

3Bedrooms
2 Washrooms
1 Kitchen
Large Living Room

## NEILSON/SHEPPARD



SOLD

CONDO
APARTMENT
2 Bedroom
2Washrooms
Close To Mall,
TTC,Etc

**Asking Only $129,900**

## MORNINGSIDE/FINCH



$419,900

New Detached Home
4 Bedrooms
4 Washrooms
Walkout Basement

## NEILSON/MCLEVIN

$289,900



4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchen

## LAWRENCE/MANSE

REDUED

Lease Only
$1325



Detached Home
Immaculate Condition
4 Bedrooms
3 washrooms


## COFFEE SHOP IN NEWMARKET

*$10,000 Weekly sales,*
*Rent 5800/mthy*
*Good income, Good Potential*

**Asking only $139,000**

$144,900

2 BEDROOMS CONDO
2 WASHROOMS
GREAT VIEW



## BRAND NEW CONDOS FOR SALE BY

## WELLKNOWN BUILDERS

1BED ROOM & 1+DEN
2BEDROOMS & 2+DEN
3BEDROOMS & 3+DEN

AFFORDABLE PRICEPRICE
STARTING FROM

***ONLY $139,000***

**FIRST HOME BUYERS**
**ONLY 5% DOWN**






# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

சகலருக்கும் நன்மை தரும் சர்வாங்க ஆசனம்

சர்வ-அங்க- ஆசனம். அதாவது சர்வாங்க ஆசனம் என்று பெயரிட்டார்கள் நமது முன்னோர்கள். உடலில் உள்ள எல்லா அங்கங்களுக்கும் இந்த ஆசனத்தால் பலன் கிடைக்கின்றது. அதனால் இதற்கு சர்வாங்க ஆசனம் என்று பெயர்வந்தது.



இந்த ஆசனம் முதுமையைப் போக்கும். தைரொய்ட் சுரப்பி (Thyroid Glance) நன்குவேலை செய்யும். ஞாபக சக்தியை அதிகப்படுத்தும், தொந்தி குறையும், மலச்சிக்கல் நீங்கும், கல்லீரல் நோய், கண்பார்வைக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி என்பன குணமடையும்.

இந்த ஆசனத்தைப் பெண்கள் செய்தால் கர்ப்பப்பை நோய்கள் வராது தடுக்கும். வாயுத்தொல்லை ஏற்படாது. நன்றாகத் தூக்கம் வரும். தைரொய்ட் பாரா தைரொட்டு போன்ற நோ உள்ள இடங்களில் தேங்கி நிற்கும் இரத்தத்தை நாடி நரம்புகள் மூலம் மேலே ஏற்றி மறுபடியும் அதை கீழே இறக்கிடும் சக்தி இந்த ஆசனத்திற்கு உண்டு. இதனால் இரத்த நாளங்களுக்கு சுத்த இரத்தம் பெருகும்.

இந்த ஆசனத்தை எப்படிச் செய்யலாம்.

செயன் முறை

1. முதலில் கைகளை பக்கத்தில் வைத்தபடி மல்லாந்து படுத்துக்கொள்ளுங்கள். நன்றாக ஆழ்ந்த மூச்சை உள்ளும் வெளியும் இழுத்து விடுங்கள்.

2. பின்பு கைகளின் உதவியுடன் கால்களை மேலே தூக்கியபடி முதுகுப்பகுதியையும் சேர்த்து மேலே நிமிர்த்த வேண்டும். இந்த நேரத்தில் கை அழுத்தம் முதுகிலும் உடலின் பாரம் முழங்கையிலும் பொறுத்தபடி இருக்கும்.

3. கால்கள் இரண்டும் கூரைப்பகுதியை பார்த்தபடி இருப்பதுடன் உடல் சாய்ந்துவிடாதபடி படத்தில் காட்டியவாறு இரண்டு கைகளையும் மடக்கி இடுப்புப்பகுதியில் முட்டுக் கொடுக்க வேண்டும். ஆரம்ப பயிற்சியின்போது இந்த நிலையில் ஒரு நிமிடம் வரை நில்லுங்கள் பின் மெதுவாக முதலில் படுத்த நிலைக்கு வந்துவிடுங்கள்.

குறிப்பு:- ஒவ்வொரு நாளும் இந்தப் பயிற்சியைச் செய்து வரும்போது நேரத்தைப் படிப்படியாக அதிகரித்து 3 நிமிடங்கள் வரை நிற்கலாம். இப்பயிற்சியை ஆண் பெண் வேறுபாடின்றி எந்த வயதிலும் செய்து நன்மை பெறலாம்.





# MANIKKANDAN

## Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்.**

*Wedding or any Occasions*
*Special Deals Available*





**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள **மணிகண்டன்.**

Pl. Call: Siva 416-283-1260

*790 Military Trail , Unit 1A*
*Scarborough ON M1E 4P7*


## சிந்திக்க!

- மற்ற நாடுகளுடன் ஒத்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். பூசலும் பகைமையிலும் நிறைந்த கடந்தகாலம் நம் எதிர்கால நலனுக்கு பெரும்தடை.


# தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY

**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்:
416-332-0944

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough 416-332-8451

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




### In Classes

* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course


* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

17 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# J DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்

#7 Birchcrest Court (Finch / Warden)

416-502-3033

# சீதனப்பேய்



*சீதனம் என்ற நூதனச் சொல்லின்*
*வேலையை எண்ணிப்பாரு நீ*
*ஆதிமுதல் அது வந்ததினாலே*
*வாழுது பூமியில் சாவின்றி*
*திருமணச் சடங்குதனை*
*திருமணம் நடத்தி வைக்கும்*
*இடையினில் இது வந்து*
*தடங்கலை ஏற்படுத்தும்*
*பெண்பார்க்க வரும் கண்டாக்டர்*
*என்றாலும் பொன்தானே தேடுகிறார்*
*கண்போல வளர்த்த பெண்ணுக்காகப்*
*பெற்றோர் பொன்அள்ளி வீசுகிறார்*
*பொன்னால் தானே கல்யாணம்*
*நல்லாய் இங்கே நடக்கிறது*
*என்னால் இதை சொல்லாமல்*
*கல்லாய் வாழ முடியாது*
*பேதைப்பெண்கள் வாழ்வில்*
*நாறிப்போன காசு ஏறித்தான் மிதித்தது*
*ஆசைக் கணவனின் தாயார் சொல்லுத்தானே*
*பேயாய் உதைத்தது*
*குட்டக்குட்டக் குனிந்ததனால்*
*பட்டுப்போன மரம் ஆனீர்*
*பெட்டை இனம் துணிந்துவிட்டால்*
*கெட்டவர்கள் பிணம் ஆவர்*
*இஷ்டப்படி நீங்கள் சீதனம் கேட்பது*
*சட்டப்படி குற்றம் அன்றோ*
*கஷ்டப்பட்டவரை இலட்சங்கள் கேட்பதால்*
*வாழ்த்தாது சுற்றம் அன்றோ*
*வரதட்சணைக் கொடுமை இங்கே*
*தினசரி நடக்கிறது*
*மனிதகுலப் பெருமைதனைக்*
*குழிதோண்டிப் புதைக்கிறது*



*ஆணுக்கு வாங்குதல் பெண்ணுக்குக்*
*கொடுத்தல் மண்மேலே நடக்குது*
*விண்ணுக்குள் இருக்கும் கல்யாணச்*
*சொர்க்கத்தை ரொக்கம்தான் நடத்துது*
*வீடுதோறும் நடக்கிறது*
*சீதனத்தால் பண்டமாற்று*
*மூடுவிழா நீ நடத்தி*
*பாதைதனை மாற்றிக் காட்டு!*

*ஆக்கம்: V. ஞானலிங்கம்*
*ஹம்பெர்க், ஜேர்மனி*

# பெண் விடுதலை

*பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி*
*பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்!*
*மண்ணுக்குள் ளெவ்வுயிருந் தெய்வ மென்றால்,*
*மனையாளுந் தெய்வமன்றோ? மதிகெட் டீரே!*
*விண்ணுக்குப் பறப்பதுபோற் கதைகள் சொல்வீர்,*
*விடுதலையென் பீர்கருணை வெள்ள மென்பீர்,*
*பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்*
*பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை யில்லை.*

*-பாரதியார்*


## KING OF PARTIES

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சகலவிதமான வைபவங்களையும் குறைந்த செலவில் சிறப்பாக அழகான மண்டபத்தில் நடத்த







அழையுங்கள்: ராஜன்
Tel: 416-751-1171





## யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



## YARLCAN

## STEAM CLEANING

* DUCT CLEANING
* CARPET CLEANING

உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-




மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

## ரவி நடராஜா



Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON





## S M I L E

- BUSINESS PLANS
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

RK CONSULTANTS

PL. CALL: 905-887-7457 / 905-751-7537
24 hrs, 365 days




## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?




வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.

முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving



Call: Kanthan Tel: 416-283-9538

# 2003 இல் வெளிவந்த படங்கள்

## ஒரு கண்ணோட்டம்

*சின்னத்திரை சீரியல்களைப்பார்த்து கண்ணீர்வடித்த தாய்க்குலங்கள் மெல்ல தியேட்டர் பக்கம் திரும்பியதால் இரண்டாயிரத்து மூன்று தயாரிப்பாளர்களின் கொண்டாட்டப் படங்கள். தயாரிப்பாளர்களுக்கு ஆக்ஸிஜன் (Oxygen) கொடுத்த இயக்குனர்களைப் பாராட்டியே ஆகவேண்டும்.*

*தூள் - தரணி*
*காதல் கொண்டேன் - செல்வராகவன்*
*சாமி - ஹரி*
*பார்த்தீபன்கனவு - கரு. பழனியப்பன்*
*காக்க காக்க - கௌதம்*
*ஜெயம் - ரவி*
*திருடாதிருடி - சுப்பிரமணியம் சிவா*

## பரம்

*கலெக்ஷன் குறைவு தான் என்றாலும் உன்னைச் சரணடைந்தேன் என்ற நல்ல படம் கொடுத்த சமுத்திரக்கனி, பெரிய ஹீரோ என்ற அந்தஸ்தை அடையா விட்டாலும் காக்கிச் சட்டைக்கு மறுபடியும் ஒரு கம்பீரத்தைக் கொடுத்த பீஷ்மர்-ரஞ்சித், திருமலை ரமணா, ஒற்றன்-*




*இளங்கண்ணன், வியாபார ரீதியாக வெற்றியைப் பெறாவிட்டாலும், இயற்கை என்ற அற்புதமான படம் கொடுத்த ஜனநாதன், லேட்டஸ்ராக விநியோகஸ்தர்களுக்கும் தயாரிப்பாளருக்கும் வாய் நிறையப் புன்னகையையும், பை நிறைய பணத்தையும் கொடுத்த ஜுட் அழகர் பெருமாள் என்று எல்லோருமே பாராட்டுக்குரியவர்கள்.*

*பொதுவாக ஒரு படம் ஓடினால் அப்படத்தின் நாயகியையும் நாயகனையும் சுற்றிப் பெருங்கூட்டம் வரும். இந்தா வச்சிக்கோ என்று பணத்தைக் கொட்டுவார்கள். ஆனால் இந்த வருடம் நாயகன்களை, மொய்த்த தயாரிப்பாளர்கள், அந்தளவிற்கு நாயகிகள் பக்கம் தலைவைத்துப் படுக்கவில்லையென்றே தோன்றுகிறது. திருடாதிருடி வெற்றிக்குப் பின் அப்படத்தின் நாயகி சாயாசிங் பெரிய ஹீரோக்கள் யாருடனும் ஜோடி சேரவில்லை என்பது உதாரணங்களில் ஒன்று.*

*சோனியா அகர்வால், ஜெயம் சதா இவர்களிருவரும் ஒன்றிரண்டு படங்களுக்கு மேல் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. எப்பவும் என் ரூட்டுத் தனி ரூட்டு என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருப்பவர் ஜோதிகா மட்டுமே! சின்னப்பையன் சிம்புவுடன் ஒரு படம். பெரியபையன் விக்ரமுடன் ஒருபடம் மனங் கவர்ந்த சூர்யாவுடன் ஒரு படம். இப்படி ரவுண்டு கட்டி அடித்துக் கொண்டிருப்பது இந்த ஒய்யார தொப்பை தான்.*

*கடந்த வருடம் பார்த்திபன் கனவு என்ற ஒரே படத்தில் ஸ்கோர்களை அள்ளிவிட்ட சிநேகா, அதன்பின் எங்கு போனார் என்பதே தெரியவில்லை. தெலுங்குக்குப் போய்விட்டதாகச் சொல்கிறார்கள். தமிழில் ஜனாவில் நடித்துக் கொண்டிருப்பதாக அவ்வப்போது வெளிவரும் ஸ்டில்கள் அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றன. அதன்பிறகு? இந்தக்கேள்விக்கு சிநேகாவே பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்.*

*சாமிக்குப் பின் மாமிக்குத்தான் மார்க்கெட் என்று சொன்னது போல த்ரிஷாவும் கனஜோராக காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார். இப்போது கில்லியில் விஜயுடன் ஜோடி சேர்ந்திருக்கும் அவர், அருள் படத்தில் தனக்கும் இடம் இருக்கும் என்று நினைத்திருந்தார். அவர் நினைப்பில் விழுந்தது மண்அல்ல. அழகான ஜோதிகா. ஆனாலும் ஹரி இயக்க ரஜினி நடிக்கும் புதிய படத்தில் த்ரிஷா தான் ஜோடி என்கிறது கொலிவூட் வட்டாரம். அதற்கு வசதியாக இப்போதே வருகின்ற படங்களை எல்லாம் அவர் ஒப்புக் கொள்ளத் தயங்குகின்றார் என்கிறது அதேவட்டாரம்.*

*பணத்தை அள்ளி இறைத்தால் போதும், படத்தை ஓட்டி விடலாம் என்று கணக்குப் போட்ட இரண்டு இயக்குனர்கள் வாங்கிக் கட்டிக்கொண்டார்கள். இது நடந்ததும் சுகமாக 2003 இல் தான். தமிழ் சினிமாவின் தாதா இயக்குனர் (செலவு விஷயத்தில்) ஷங்கருக்கு விழுந்ததே ஒரு அடி. அது அடியா இல்லை இடியா? அந்தப் புலியையே கவிழ்த்துப் போட்ட பொல்லாத ஜனங்கள் எலியை என்ன செய்வார்கள்? அதேகதி தான் 'எனக்கு 20 உனக்கு 18' படத்தை எடுத்த ஜோதி கிருஷ்ணாவுக்கும்.*

*உம்மணாம் மூஞ்சிகளாக இருந்தாலும் அவர்களின் குமட்டில் குத்திக் குதூகலத்தை ஏற்படுத்துகின்ற பெருமை காமெடியன்களுக்குத் தான் சரி, ரசிகர்களின் கைதட்டலைக் கணக்கிட்டாலும் சரி விவேக்தான் நம்பர் ஒன்! வடிவேலும் பார்த்திபன் கூட்டணிக்கு மக்கள் கொடுத்த மரியாதை, இந்த முறையும் காதல் கிறுக்கன் படத்தில் தொடர்கிறது. இந்த ஓட்டத்தில் கிட்டத்தில் வந்து வந்து போகிறவர் கருணாஸ். இன்னும் முயற்சி எடுத்தால் 2004இல் தேற வாய்ப்பிருக்கிறது.*



1.தூள்
2. காலாட்படை
3. வசீகரா
4. அன்பே சிவம்
5. அன்னைகாளிகாம்பாள்
6. ராமச்சந்த்ரா
7. சொக்கத்தங்கம்
8. டெக்சிடோ (டப்பிங்)
9. பங்கார்ன்
10. ஆசை ஆசையாய்
11. திடிரான்ஸ்போட் (டப்பிங்)
12. காதலுடன்
13. ஜுலி கணபதி
14. ஸ்ருடன் நம். 1
15. அன்புத் தொல்லை
16. யெஸ் மடம்
17. பல்லவன்
18. மிலிட்டரி
19. என்னைத்தாலாட்ட வருவாளா
20. வெற்றி (டப்பிங்)
21. காம வேதம் (டப்பிங்)
22. நிலவில் களங்கமில்லை
23. மனசெல்லாம்
24. பவளக்கொடி
25. இரட்டைப்புயல்
26. டெரர்ட்ராக்ட்
27. தூள் பொலிஸ் (டப்பிங்)
28. மேஜிக் மேஜிக் (3டி)
29. தம்
30. காதல் சடுகுடு
31. சேனா
32. பந்தா பரமசிவம்
33. அரசு
34. வேதாளம்
35. புன்னகைப்பூவே
36. வெல்டன்
37. ராஜகுமாரி (டப்பிங்)
38. ஹாரிபாட்டரும் ரகசிய அறையும் (டப்பிங்)
39. திகில் தீவு (டப்பிங்)
40. சாமி
41. இன்றுமுதல்
42. அன்பே அன்பே
43. புதிய கீதை
44. இனிது இனிது காதல் இனிது
45. லேசா லேசா
46. கிரேடில் 2 தி கிரேவ் (டப்பிங்)
47. மேரி ஆல்பட் (டப்பிங்)
48. சாம்பவி (டப்பிங்)
49. பரசுராம்

தொடரும்...


வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

FIREMAN LOFRANCO
PERSONEL INJURY LAWYERS

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின்
உங்கள் முடிவை எடுங்கள்




*IF YOU HAVE OPTIONAL INSURANCE YOU CAN CLAIM
UP TO $1,000.00 IRB'S PER WEEK
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A MOTOR VEHICLE ACCIDENT
• FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY • SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் $172,000.00 வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் $172,000.00 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

5255 YONGE ST, SUITE 1300, TORONTO - MISSISSAUGA - KITCHENER

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே அழையுங்கள்

தீபன் - (416) 505-9804
24 Hours Direct Line



# அறுவை 13

'ஹலோ'

'வணக்கம் சேர். அன்றைக்கு வந்து சிறப்பித்ததுக்கும் வாழ்த்தியதுக்கும் நன்றி சேர்.'

'வணக்கம். வணக்கம். கல்யாண வைபவம் மிக அடக்கமாகவும் சிறப்பாகவும் இருந்தது தம்பி. எப்படி தேன்னிலவு எல்லாம்?'

'அதையும் அடக்கமாகத்தான் முடித் தோம். ஊரிலே இனஞ்சனம் கஷ்டப் படுகையில் எங்களுக்கென்ன ஆடம்பரம்



வேண்டியிருக்கு சேர்.'

'நீ ஒரு வித்தியாசமான பிறவி. உனது இன உணர்வையிட்டு நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.'

'சில பேர் கனடாவுக்கு வந்தபின் பெற்று வளர்த்த தாய் தந்தையையுமல்லே மறந்து விடுகினம் சேர். நான் அங்கே போனபோது சில பெற்றார் எனக்குச் சொல்லியும் இருக்கினம். கடிதத் தொடர்பு கூட இல்லை என்று கவலைபட்டினம்.'

'பெற்றாரைக் கவனியாதவர் ஒரு சிலராகத்தான், மிகமிகச் சிலராகத்தான், இருக்க முடியும். பொதுவாக எமது இளைஞர்கள் பெற்றாரைப் பேணு பவர்களாகவே உள்ளனர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று படித்து வந்தவர்களல்லவா? குடும்பப் பொறுப்புக் களில் உடன்பிறப்புக்களையும் பெற்றாரை யும் அழைத்திருப்பவர் அதிகம். அப்படிச் செய்யமுடியாதவர் மாதாமாதம் பெற்றவர் களுக்கு பணம் அனுப்பி வருவதையும் நான் அறிவேன். அதற்காகவே ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலில் ஈடுபட்டு அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் பொறுப்பு மிகுந்த பிள்ளைகளும் ஏராளம். பெற்றவர்களை மறந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.'

'ஆனால் பிறந்த பொன் நாட்டை மறந்து வரும் தமிழர் கனடாவில் அதிகமாகி வருகிறார்கள் சேர்....'

'அத்தோடு கூடவே கொண்டுவந்த மொழியையுமெல்லே மறந்து போகினம் தம்பி. சொந்த மொழியைப் பேசுவதை மரியாதைக் குறைவாகவும் பலர் நினைக் கிறார்கள். அதனால் பிள்ளைகளோடும் பேசுகிறார்கள் இல்லை. சொல்லிக் கொடுப்பதும் இல்லை.'

'நீங்கள் இதுபற்றி அடிக்கடி பேசியும் எழுதியும் வருகிறீர்கள்....'

'தமிழை இலவசமாகப் படிப்பதற்கு பல வகுப்புக்களையும் ஒழுங்கு செய்திருக் கிறேன். பல அமைப்புக்களும் தமிழ்க் கல்வியை புகட்டிவருகின்றன. ஆனால் எத்தனைபேர் அவற்றை முறையாக பயன்படுத்துகிறார்கள்? உம்மைப்போன்ற தமிழ் உணர்வுள்ள சிலபேர்தான். பிள்ளைகளுக்கு தமிழைப் படிப்பியுங்கள் என்று சொன்னால் கனடாவில் தமிழைப் படிப்பிப்பதால் என்ன பயன் என்றெல்லெ கேட்கிறார்கள். தாய் மொழியைக் கற்பிப்பதும் கற்பதும் எமது உரிமை என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள்.'

'உரிமைக்காகத் தாயகத்திலே இளைஞர் உயிரைக்கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்திலும் இங்குள்ளவர் பலர் தமிழ் உணர்ச்சி அற்றவர்களாய் இருப்பதற்கு என்ன சேர் காரணம்?'

'அடிப்படைக் காரணம் எமது மொழியின் அருமை பெருமைபற்றிய அறியாமைதான். அடுத்த காரணமாகத் தாழ்வுச் சிக்கலைச் சொல்லலாம். இதனைச் சாதாரண மொழியில் அடிமைப் புத்தி என்றும் கூறலாம். தமது பெருமை அறியாதவர், தன்னம்பிக்கை இல்லாதவர், தன்மானம் அற்றவர் போன்றோரிடத்தில் அடிமைப் புத்தி வளர இடமுண்டு. வேற்று நாட்டவரால் ஆளப்பட்ட ஓர் இனத்திடமும் இவ்வியல்புகள் பொதுவாகக் காணப் படும்.'

**கவிஞர் வி. கந்தவனம்**

'இவர்களை எவ்விதம் மாற்றலாம்?'

'தமிழ் உணர்வு மிகுந்தவர்கள் தங்கள் முயற்சிகளில் இவர்களையும் ஈடுபடுத்தல் வேண்டும். வீடுகள் முதல் விழாக்கள் வரை தமிழுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளிப்பதன் மூலம் தமிழ் உணர்வை வளர்த்தெடுக்கலாம். தமிழ் உணர்வு வளரத் தன்மானம் தலைப்படும். தன்மானம் தலைப்பட அடிமைப்புத்தி அகன்றுவிடும். சரி தம்பி. நான் ஓரிடத்துக்குப் புறப்படவேண்டியிருக்கு. பிறகு சந்திப்போம். வணக்கம்.'

'சந்திப்போம் சேர். வணக்கம்.'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!


YARL

## WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS
DRAPERIES AND
SHUTTERS
• Venetian Blinds

• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

FREE ESTIMATE

இருபத்தெட்டு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.



5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்
416.332.8482 / 416.419.9247 / 905.201.7733

CHILDREN'S EDUCATION FUNDS INC.
A VERY DIFFERENT RESP

அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம் (R.E.S.P)

நீங்களே தெரிவு செய்யுங்கள்

SCHOLARSHIP PAYOUTS FOR - 2003
(புலமைப் பரிசில் கொடுப்பனவு)
TOTAL SCHOLARSHIP FOR 4 YEARS PROGRAM

அரசின் 20% இலவசம்

THE CHILDREN'S EDUCATION TRUST
PAID $5100.00 PER UNIT
HERITAGE SCHOLARSHIP TRUST
PAID $2840 PER UNIT (Heritage units are smaller ,therefore need to multiply by 2 for accurate comparison $1420x2)
CANADIAN SCHOLARSHIP TRUST
PAID $2980.00 PER UNIT
U.S.C FAMILY EDUCATION SAVINGS PLAN
PAID $2830.02 PER UNIT (U.S.C units are smaller, therefore need to multiply by 2 for accurate comparison $1415.01x2)

NOW EARN
AIR MILES Travel and More
REWARDS MILES WITH CET



மேலதிக விளக்கத்திற்கு Seelan இவரை அழையுங்கள்
416 451 0271

சீலன்



"நாம் நமது குழந்தைகளின் உயர் கல்விக்கு உதவி செய்யத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக்குழந்தைகளே!"

# இரு அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு இடையேயான ஒற்றுமைகள்!

## இது ஒரு தற்செயலா?





1ஆம் பக்கத் தொடர்ச்சி

5. இரு ஜனாதிபதிகளும் தலையில் சுடப்பட்டார்கள்.

6. இரு ஜனாதிபதிகளும் சுடப்பட்டது ஒரு வெள்ளிக்கிழமை நாளில் ஆகும்.

7. லிங்கனின் காரியதரிசியாக இருந்தவர் பெயர் கெனடி . கெனடியின் காரியதரிசியாக இருந்தவர் பெயர் லிங்கன்.

8. இருவரும் கொலை செய்யப்பட்டது அமெரிக்காவின் தெற்கு பகுதியில் வசிப்பவரால். (Southerns)

9. இரு ஜனாதிபதிகளையும் தொடர்ந்து ஜனாதிபதியாக வந்தவர்கள் பெயர் ஜோன்சன் (Johnson), இவர்கள் இருவரும் அமெரிக்காவின் தெற்கு பகுதியில் வசிப்பவர்கள். (Southerns)

10. லிங்கனை தொடர்ந்து வந்த ஜனாதிபதி அன்றூ ஜோன்சன் (Andrew Johnson) பிறந்த ஆண்டு 1808. கெனடியை தொடர்ந்து வந்த ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் (Lyndon Johnson) பிறந்த ஆண்டு 1908.

11. லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் (John Wilkes Booth) பிறந்த ஆண்டு 1839. கெனடியைக் கொலைசெய்த லீ ஒஸ்வோல்டு (Lee Harvy Oswald) பிறந்த ஆண்டு 1939.

12. இரு கொலைகாரர்களும் அவர்களுக்கு உரிய மூன்று பெயர்களாலும் அறிமுகமானவர்கள். அந்த இருவருடைய பெயர்களிலும் மொத்தமாக இருப்பது பதினைந்து எழுத்துக்கள்.

13. லிங்கன் சுடப்பட்ட கொட்டகை (Theater) யின் பெயர் ஃபோட் (Ford). கெனடி சுடப்பட்ட கார் லிங்கன் (Lincoln). அது செய்யப்பட்டது ஃபோட் (Ford) நிறுவனத்தால்.

14. லிங்கன் சுடப்பட்டது கொட்டகையில் (Theater) அவரை சுட்டவர் ஒளித்தது களஞ்சியத்தில் (warehouse). கெனடியைச் சுட்டவர் இருந்தது களஞ்சியத்தில் (warehouse) அவர் ஓடி ஒளித்தது கொட்டகை (Theater) ஒன்றில்.

15. இரு ஜனாதிபதிகளையும் கொலை செய்தவர்களை நீதி விசாரணைக்கு கொண்டு வர முன்னர் கொலை செய்யப்பட்டு விட்டார்கள்.

16. லிங்கன் சுடப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் இருந்தது மன்றோவில் (Monroe) உள்ள மேரிலாண்ட் (Maryland) இல், கெனடி சுடப்படுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் மர்லின் மன்றோவுடன் (Marilyn Monroe) அவரைத் தொடர்பு படுத்தி கதைகள் வெளியானது.



எஸ். தயாளன்
அவுஸ்திரேலியா

இதுவரை இருந்த அமெரிக்க அதிபர்களில் மிகவும் உயரமானவர் ஏபிரகாம் லிங்கன் ஆவர். இவரின் உயரம் 1.93M (6 1/4") . பில் கிளின்ரனின் உயரம் 1.89M (6 - 2 1/2") ஆகும்.

மேலும் இதுவரை இருந்த அமெரிக்க அதிபர்களில் ஆகக்கூடிய காலம் பதவியில் இருந்தவர் பிராங்ளின் டி. ரூஸ்வெல்ற். இவரின் பதவிக்காலம் 12 வருடங்களும் 39 நாட்களும் ஆகும்.

வில்லியம் ஹரிகர் என்ற அதிபரே 1841 இல் ஆகக் குறைந்த காலம் பதவியில் இருந்தவர். இவரின் பதவிக்காலம் 32 நாட்கள் ஆகும். பதவியில் இருக்கும் போது சுகயீனம் காரணமாக காலமாகியிருந்தார்.





# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

ஆமாம், நீங்கள் ஒவ்வொருவரும் வாழ்விற்கு அர்த்தம் தரும் முக்கிய சந்தர்ப்பங்கள் எதிலும் ஒருபோதும் தோல்வியடைய மாட்டீர்கள். நீங்கள் தடுமாறலாம். கால் தடக்கிக் கீழே விழலாம். மீண்டும் மீண்டும் எத்தனையோ பயப்படுத்தும் இருண்ட இடங்களிற்கு உங்களைத் தள்ளி முகங்குப்புற விழப்பண்ணும் சம்பவங்களை நீங்கள் சந்திக்கலாம். ஆனால் பயப்பட வேண்டாம். இது இறைவனின் ஆத்ம பரிசோதனை! கவலையை விட்டொழியுங்கள்! சிலவேளை உனது கையோ காலோ முறிந்து போகலாம். உன் கண்பார்வையை நீ இழக்கலாம். காது மந்தமாகலாம். உன் ஐம்புலன்களையுமே நீ இழந்து விடலாம். ஆனால் நடப்பதெல்லாம் நடக்கட்டும், எது நடந்தாலும் நீ உனது சகிப்புத் தன்மையை, உனது பொறுமையை வளர்த்துக் கொள்கின்றாய். பல்வேறு மாதிரியான சந்தர்ப்பங்களிலும் உனது சகிப்புத்தன்மைக்கு எவ்வளவைத் தாக்குப் பிடிக்க முடியும், உன்னால் எவ்வளவு சாதிக்க முடியும் என இறைவனின் பொறியாம் ஆன்மா தான் இப்படி உன்னைப் பரிசோதிக்கின்றது. நீ ஒருபோதும் தோல்வியடையமாட்டாய்

லலிதா புரூடி

என்பது, உன் ஆன்மாவிற்கு நன்கு தெரிந்தபடியால், அந்தப் பேருண்மையை உனக்கு வெவ்வேறு விதங்களில் உணர்த்தத்தான் வாழ்வு இவ்வாறு படாத பாடுபட்டு, உன்னை ஆட்டிப் படைக்கின்றது. ஆகவே இதை இப்போது நன்றாகப் புரிந்து உணர்ந்து கொள். நீ ஒரு நாளும் தோல்வியடையமாட்டாய், விளங்குகின்றதா?.

சிலவேளை வழிதவறி நீ தொலைந்து போகலாம். உன் பொருட்கள் சிலவற்றைத் தொலைக்கலாம். இது இல்லாமல் என்னால் இருக்கவே முடியாதென்று நீ நினைக்கும், உனக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுமென்று நீ கவனமாய்ப் பாதுகாக்கும் பொருட்கள் சில உன்னிடமிருந்து பலவந்தமாய்ப் பிடுங்கப்படலாம். தாயகத்துப் போர்ச் சூழலில் எத்தனை உறவுகள் எவ்வளவு பொருட்களை எல்லாம் நாம் இழந்தோம். எப்போது, எங்கு, என்னவிதத்தில், எது நடந்தாலும், ஒன்றைமட்டும் நினைவில் வைத்துக்கொள். எந்த மோசமான சந்தர்ப்பமானாலும் நன்கு உணர்ந்து கொள். சகல சந்தர்ப்பங்களிலும் நான் பூரணமாக 100% தான் கட்டாயம் எடுக்க வேண்டும் என்று நம்புவதை நிறுத்தியவுடன், நீ யாவரையும் முந்திக்கொண்டு முதலாம் இடத்தை நிச்சயம் எட்டிவிடுவாய். ஒரு வகுப்போ, ஒரு குடும்பமோ, வேலைதளமோ எங்கென்றாலும் தலைமைத்துவம் உனக்கு நிச்சயம் கிடைத்து விடும். நூற்றுக்கு நூறு எல்லாம் சரியாக எப்போதும், யாவற்றிலும் அமைய வேண்டும் என எதிர்பார்ப்பது பிழை. ஒரு குறையுமில்லாமல் ஒன்றுமே ஒருபோதும் அமைவதில்லை. நான் ஒருபோதும் எதிலும் தோல்வியடையமாட்டேன் என்பதை இன்று ஏற்றுக்கொள்கின்றேன்.

வாழ்க்கையில் நான் சரியாகச் செயற்படுகின்றேனில்லை என நான் நம்புவதுதான், எனக்குள்ள ஒரே பிரச்சனை என்பதை நான் உணர்ந்ததும் என் வாழ்வு சரியாகிவிடும்.

உனக்கு ஒரு கேள்வி. வாழ்வில் நடைபெறும் ஏதாவது ஒரு சம்பவம், செயல்முறை ஏன், அது இவ்வாறு எப்படிச் செயற்படுகின்றது என்பது உண்மையில் உனக்கு விளங்காமல் இருக்கும்போது, அதை நீ எப்படி மதிப்பீடு செய்வது? எமது வாழ்க்கைச் சக்கரம் எத்திசையை நோக்கி எப்படிச் சுழல வேண்டும், ஆனால் இப்போ எப்படிச் சுழல்கின்றது என்பதைக் கொஞ்சமும் விளங்கிக் கொள்ளாமல், எனது வாழ்க்கையில் ஒன்றுமே சரியில்லை, எல்லாம் முழுப்பிழை! இப்படியான வாழ்வா எனக்கு வந்து வாய்க்க வேண்டும் என நம்பி அங்கலாய்த்து மாய்வது எம் பலரின் வழக்கம். நாம் எப்படி எப்படி வாழ, நாம் என்ன என்ன செய்யக்கூடாது என ஒரு அடிப்படை புரிந்துணர்வு எம் ஒவ்வொருவருக்கும் இருக்கும். வாழ்க்கையில் நாம் எதை எதை எதிர்பார்க்கின்றோம் என்ன என்ன எமக்கு வேண்டும் என்பது எம் யாவருக்கும் தெரியும். எமக்குத் தேவையானவற்றை எப்படி, எப்படிப் பெற்றுக்கொள்ள வேண்டும், கொள்ளலாம் என்பது எமக்குத் தெரியும் என்றும் எம்மில் சிலர் நம்புகின்றோம்.



நாம், இப்படி, நடக்கும், அப்படி நடக்காது என மனமார நம்புவது தான் உண்மையாக நடக்கும் என்பதை எம்முள் வெகுசிலர் தான் நிச்சயம் விளங்கிக்கொள்வர். எமது ஆழ்மனதில் நாம் உணர்வது தான். (Gut Feeling) நிச்சயம் நடக்கும். அன்றாடம் புதிது புதிதாய் மலரும் வாழ்க்கைச் செயற்பாடு, உனக்கு வழிகாட்டி, ஊக்குவித்து, உன்னைத்தூண்டி, வாழ்வின் அடுத்த படிக்கு உன்னைத் தயார்படுத்துகின்றது. சிலசமயம் வாழ்வில் பிரச்சனை தரும் நெளிவு சுழிவுகள் நிச்சயம் உன்னைப் பயப்படுத்தும். பிரம்மாண்டமான சவால்கள், பயங்கர அநுபவங்கள், கலங்கும் உணர்வுகள், பயம், ஏமாற்றம், கோபம் எனும் பிரச்சனைகள் உன்னை எதிர்கொள்ளும். ஆனால் வீட்டிற்கு வீடு வாசற்படியாய் ஒவ்வொருவர் வாழ்விலும் இவையெல்லாம் சர்வசகஜம்! சர்வ சாதாரணம்! வாழ்வே இப்படித்தான்! எமைச் சோதித்து பலப்படுத்த, எம் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தி ஊக்குவிக்க, எவ்வளவுதான் நாம் எச்சரிக்கையோடிருந்தாலும் சிற்சிலவேளைகளில் இவை எல்லாம் எமை எதிர்கொள்கின்றன. சில சமயங்களில் நாம் நம்பி நினைத்த மாதிரி, நான் பிழை விடவில்லை. நான் தோற்றுப் போகவில்லை, எனது வாழ்க்கை பாழாகவில்லை என்பதை அவை எடுத்துக் காட்டுவதில்லை. எம் வாழ்வில் நாம் சந்திப்பவை, நடைபெறுபவை யாவும் சரியா, பிழையா என நாம் யூகிக்க முடியாது. நாம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொன்றிற்கூடாகவும் பயணஞ்செய்து தான் இது உண்மை, இது பொய், சரி, பிழை என நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். நன்மை, தீமை, சுலபம், கஷ்டம் என சிலவேளை நாம் ஸ்தம்பித்து நின்று சரி பிழை பார்த்தால் வாழ்க்கைச் சக்கரம் இப்படிச் சுழல வேண்டும் எனும் நியதியில் சரியாகத் தான் சுழல்கின்றது என்பதை உணர்வோம்.

இதுவரை, என்வாழ்வில் நான் ஏதோ ஒரு பிழை விடுகிறேன் என நீ நம்பியிருக்கலாம். அல்லது உன் வாழ்க்கைப் பாதை செல்லும் மாதிரி சரியில்லை என நினைக்கலாம். ஆனால், உனது வாழ்க்கையின் பாதையோ, அது எப்படி எப்படிச் செல்லவேண்டும் என்பது உனக்குத் தெரியாவிட்டாலும், உன்னை எதிர்கொள்ளப்போகும் பிரச்சனைகள் அனைத்தையும் சமாளித்து வெற்றியடையும் சக்தியையும் திறமையையும் உனக்குள் இறைவன் நிச்சயம் படைத்திருக்கின்றான் என்பதில் இன்று நம்பிக்கையாயிரு. ஆம்! எனது வாழ்க்கையைச் சரிமுறையில் செலுத்தும் வழியை நான் இன்று படித்து, தேர்ச்சியடையப் போகிறேன்.

பல வருடங்கட்கு முன் எழுதப்பட்ட ஆங்கில வசன நடைக்கவிதை Desiderata இப்போ என் ஞாபகத்திற்கு வருகின்றது. எவ்வளது உண்மையான வார்த்தைகள் எவ்வளவு அழகாக எளிமையாக எழுதப்பட்டருக்கின்றது. Go Placidly Among the Noise and Haste

எனக்கொரு தெய்வீகத்தந்தை இருக்கின்றார். நான் பிறந்த நாட்தொட்டு, அவர் எப்பொழுதும் எந்த நேரத்திலும் என்னை நேசித்து வந்திருக்கின்றார். எதிர்காலத்திலும் நிச்சயம் அவர் என்னை நேசித்து அன்புடன் எனக்கு வழி காட்டுவார் எனும் உண்மையை உணர்ந்ததும் எனது வாழ்வு வளம் பெறும். "என் அப்பாவை எனக்குத் தெரியாது. நான் பிறக்க முதல் அவர் இறந்து விட்டார்." அல்லது," என் அப்பா எனக்குத் ஒன்றுமே செய்யவில்லை. சின்ன வயதிலேயே எங்களை விட்டுப் பிரிந்து போய்விட்டார்." எனப் பலர் அங்கலாய்ப்பதை நாம் கேட்டிருப்போம். எமது தாயுடன் சேர்ந்து எம்மை உருவாக்கிய விதையாகிய எம் மானிடத்தந்தையை, எம் ஒவ்வொருவருடைய மூலாதாரமாகிய இறைவனுடன் நாம் ஒப்பிடுவதால் ஏற்படும் குழப்பம் இது. ஆம்! எம் மானிடத்தந்தையுடன் எமக்கு வாழ் வளித்து வழிகாட்டும் தெய்வீகப்பிதா ஒருவரும் நிச்சயம் எமக்கு இருக்கின்றார்.

தமது தகப்பனாரைத் தெரிந்தும், அவரில் விருப்பமில்லாத பலர் எம்மிடை இருக்கின்றனர். "எனக்குத் தெரிந்த அப்பா, என்னை மதித்து நேசிக்கவில்லை. என்னை உள்ளபடியே மனதார ஏற்கவில்லை. எப்போதும் குடிபோதையிலிருந்த அவர் என்னுடன் பேசுவதேயில்லை. அவர் நேரத்துடன் வீட்டிற்கு வருவதில்லை. அபூர்வமாகப் பேசும் போது அவர் நையாண்டியாக நக்கலடித்து குற்றஞ்சாட்டி என் மனதை நோகடிப்பார். அவரது சொல்லடி, கையடி சிலவேளை என்னைக் காயப்படுத்தியிருக்கலாம். வருத்தப்படுத்தியிருக்கலாம். என் தந்தையுடன் என் உறவு இப்படிப் பெரிய பிரச்சனையாக உருவானதற்குக் காரணம் முழுக்க முழுக்க அவர்தான்", என நம்பும் பலர் எம்மிடை இருக்கலாம்.

ஆனால் உன் தந்தை உன்னை ஒருபோதும் கைவிடவில்லை. மறக்கவில்லை உனக்குப் பாதகம் செய்யவில்லை. உன்மேல் கொண்ட அபரிமிதமான அன்பினால், உனக்குத் தேவையானவற்றை அவர் சரியான நேரத்தில் அப்பப்போ கொடுக்கின்றார். உனக்கு வழிகாட்டி பாதுகாப்பளித்து, எப்போதும் அவர் உன்னுடன் இருக்கின்றார். எப்போதும், எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல இறைவனுடன், உனது மானிடத் தந்தையை ஒப்பிட்டுக் குழப்பமடையாதே.


உனது உண்மையான தந்தை யார் என்பதை இன்று நீ புரிந்து உணர்ந்து கொள். உன்னையே நீ புரிந்தீ கொள்ள அவரிடம் இறைஞ்சி உதவி கேள். உன் வாழ்வைப் பற்றியும் அதில் அவர் பங்கைப் பற்றியும் கேள். உன்னைப் பற்றி அவருக்கு தெரிந்ததையும், உன் வாழ்க்கைப் பாதையையும், எதிர்காலம் உனக்கு அளிக்கப் போவது என்ன என்பதைப்பற்றியும் நன்கு கேட்டுத் தெரிந்து கொள். பின்னர் நீ வெறுத்து வந்த உன் மானிடத் தந்தையை எப்படி மன்னிப்பது என்பதைக் கற்றுக்தரச் சொல்லி உன் இறைவனிடம் கேட்டுத் தெரிந்து கொள். எனது தந்தையை இன்னும் பூரணமாக அறிந்து நேசிக்க இன்று முதல் நான் இன்று முயற்சி செய்கின்றேன்.

வாழ்வில் வெற்றியடைய, வெற்றியின் அடிப்படை மூலகங்களை நான் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்ததும் என் வாழ்வு உயர்ச்சி யடையும். வெற்றி என்பது என்ன? இறைவனைப் போற்றிப் பணிந்து பிரார்த் தித்தல். நீ நீயாக இருப்பததற்காக உன் னிடமுள்ள யாவற்றிற்கும் இறைவனுக்கு நன்றி கூறு. வாழ்வின் சகல துறைகளிலும் வெற்றி பெற உதவுவது, நன்றிப் பெருக்குடன் இதயத்திலிருந்து பீறிடும் இறைசக்திப் போற்றுதல் தான்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*



LOW - LOW RATES AVAILABEL.
TO GET BEST RATE IN TOWN
PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





For more information call:
Anil Joshi at
416.888.1072




# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)


Answers to Tutorial 141 February 15, 04

Ans. 1. Let 1 + K = 3a, 1 + 2K = 5 b, 1 + 8k =7c
a =( k + 1) /3 is an integer when k = 2, 5, 8, 11... 59, 62, 65
b =(1+ 2k)/5 is an integer when k = 2, 7, 12, 16... 57, 62, 67...
c = (8k +1)/7 is an integer when k = 6, 13, 20, 27,... 55,62, 69...
∴ Smallest positive value of k satisfying all three condition is 62.

Ans. 2. (x + y )/ xy = 1/a =1/y + 1/x ————(1)
(x +2)/xz =1/b = 1/z +1/x ————(2)
(y + z)/yz =1/c = 1/z +1/y —————(3) solving for 1/x
(2) - (3) gives 1/x - 1/y = 1/b - 1/c---------(4)
(4) + (1) gives 2/x = 1/z +1/b +1/c
∴ x = 2 abc / (bc + ac - ab)




Ans. 3 Extend XE and YF to meet at T. XT perpendicular to YT. Let the radius of the large circle be R.
ET = AB - XE - FN = 9 - R - 2 = 7 -R
TF = 8 - 2 - R = 6 - R
EF = R + 2.In triangle EFT, $EF^2 = ET^2 + TF^2$
ie $(R + 2)^2 = (T - R)^2 + (6 - R)^2$
ie $R^2$ - 30 R + 89 = 0, (R-3) (R - 27) = 0
R = 3 or 27, In this condition R = 3




Ans. 4. In order to have a multiple of (x + 5), there must be no reminder after division by (x + 5).
therefore the first multiple greater than f (X) is f(x) + 2.

Ans. 5.If A and B are included, we select(r-2)elements from(n-2)is n-2 ways
r-2

Tutorial - 142

1. Two positive integer have a sum of 7 and a product of 12. Find the sum of the square of there two numbers [grad. 9]

2. At present, the sum of the sum of the ages of a mother and her son is 33 years. Find the smallest numbers of years until the mother's age is 4 times the son's age. [Grade 6]

3. On a rectangle table 5 units long and 2 units wide, a ball is rolled form point P at an angle of 45 deg. to PQ and bounces off SR The ball continues to bounce off the sides at 45deg. until is reaches S. How many bounces of the ball are required. [Gr. 10]


4 .A lands caper plans to plant a row of ten trees. There are five cedars, three pines and two spruces available. How many different arrangements of the ten trees can be planted if all trees from each species must be planted side by side.

5.For which non - zero real numbers x, is $\frac{x - |x|}{x}$ a positive integer.

BY. *MR. S.F.XAVIER (Teacher)* TEL: *416-431-6774*

பறவைக் காச்சலினால் எலியை மக்கள் உணவாக சமைக்கின்றனர். - *(வானொலிச் செய்தி 26.02.04)*







எந்தப் பக்கம் போவேன்.
- *கலகலப்பு தீசன்*


## CHIVAKAMY'S ACADEMY




TUITION GIVEN BY UNIVERSITY STUDENTS FOR
Grade 1 - Grade 10
Grade 4 to Grade 5–> Math, English, Science, French
Grade 6 - Grade 10 –> Math, Science, French
வயலின், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
On the Intersection of MCLEVIN & PENNYHILL
தொடர்புகளுக்கு: 416-283-5265 / 416-299-5083

## TUITION




Grade 6 to 10 - Mathematics & Science
Grade 11 to 12 & College
Mathematics (Calculus / Geometry Algebra / Data Manage, etc) & Physics.
Computer Classes ( In English & Tamil) for Adults & Kids
Ms Office, Internet applications, Programming, Database & AutoCAD... etc.
Contact: "Suresh" : MSc qualified & experienced Tutor ´´Homework Help´´ Quiz´´ Practice Tests´´ One-to-One guidance ´´Tips for scoring marks
Residence: 416-615-2258 Cell: 416-732-8021

## TUTION




